வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

ඊළනාඩු








Email : news@eelanadu.lk | மலர் : 04 | 02.10.2023 திங்கட்கிழமை | இதழ் : 296 | பக்கங்கள் : 16


## திருமலையில் விகாரைக்கு எதிராக போராட்டம்:

# தடை விதித்தது நீதிமன்றம் கூடியவர்கள் விரட்டியடிப்பு!

**திருகோணமலை, ஒக்ரோபர் 02**

**இலுப்பைக்குளம் பொரலுகந்த ரஜமகா விகாரை கட்டுமானத்துக்கு எதிரான நேற்றைய போராட்டத்துக்கு நீதிமன்றம் தடை விதித்தது. இந்நிலையில், அங்கு கூடியவர்களை பொலிஸார் விரட்டியடித்தனர்.**



திருகோணமலை - நிலாவெளி - இலுப்பைக்குளத்தில் ரஜமகா விகாரை அமைக்கப்படுகின்றது. முழுமையாக தமிழ் மக்கள் வாழும் பகுதியில் அமைக்கப்படும் இந்த விகாரை கட்டுமானத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில், இந்த விகாரையின் கட்டுமானத்துக்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தடை விதித்திருந்தார். எனினும், இந்தத் தடையை கிழக்கு ஆளுநர் பின்னர் விலக்கிக் கொண்டுள்ளார் என்று அறிய வருகின்றது.

இந்த நிலையில், இரவோடு இரவாக இரகசியமாக மேற்கொள்ளப்பட்டு வரும் விகாரை கட்டுமானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றைய தினம் மக்கள் போராட்டம் ஒன்றை முன்னெடுக்க முனைந்தனர்.

இந்த நிலையில், நேற்றுக் காலை ஆர்ப் பாட்ட இடத்துக்கு வந்த பொலிஸார் நீதிமன்றத் தடை உத்தரவை வாசித்து காண்பித்தனர். இதையடுத்து, அங்கு கூடியவர்களை கலைந்து செல்ல உத்தரவிட்டனர்.

இதைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிட முனைந்தவர்களை பொலிஸார் அங்கிருந்து

11

# நந்திக்கடலில் மூழ்கி இளைஞர் உயிரிழப்பு

முல்லைத்தீவு, ஒக். 02

நந்திக் கடலில் மூழ்கி இளைஞர் ஒருவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்தார்.

மந்துவில் பகுதியை சேர்ந்த தர்மராசா நிசாந்தன் (வயது 33) என்பவரே உயிரிழந்தார். நேற்று அதிகாலை 5.30 மணிக்கு வீட்டிலிருந்து புறப்பட்டு சென்றிருந்தார். இந்த நிலையில் நந்திக் கடலில் மூழ்கிய நிலையில் மீட்கப்பட்ட அவர் புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட் டது.

சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# ஜனாதிபதி தேர்தலுக்கு ரூ. 1,100 கோடி ஒதுக்கீடு!

கொழும்பு, ஒக். 02

ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கு வசதியாக அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவு திட்டம் ஊடாக ஆயிரத்து 100 கோடி ரூபாய் ஒதுக்கப்படவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அரசமைப்பின் பிரகாரம் 2024ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டிய வருடம் என்பதால் இந்த நிதி ஒதுக்கப்படவுள்ளதாகக் கூறப்படுகிறது.

கடந்த வருடம் ஜூலை மக்கள் எதிர்ப்பால் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியிலிருந்து அகற்றப்பட்டதையடுத்து,

11

## நீதிபதி சரவணராஜா விவகாரம்:

# அரசை கண்டித்து கிளிநொச்சியில் இன்று கவனவீர்ப்புப் போராட்டம்!

கிளிநொச்சி, ஒக். 02

முல்லைத்தீவு நீதிபதி ரி. சரவணராஜாவுக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல், பதவி விலகும் நிலைமை ஏற்படுத்தப்பட்டமையை கண்டித்து இன்று திங்கட்கிழமை கிளிநொச்சியில் கவனவீர்ப்பு போராட்டம் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி பழைய கச்சேரிக்கு முன்பாக இன்று காலை 9.30 மணி தொடக்கம் 10.30 வரை நடைபெறும் இந்தப் போராட்டத்தில் அனைவரும் திரண்டு வந்து பங்கேற்க வேண்டும் என்று யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தவை வருமாறு,

ஒரு தமிழ் நீதிபதி இந்த மண்ணிலே இருந்து கொண்டு ஒரு பணியை ஆற்ற முடியாத இந்தக் கால கட்டத்தில், அவர் இந்த நாட்டை விட்டு ஓட வேண்டிய ஒரு சூழல் எவ்வாறு ஏற்பட்டிருக்கிறது. தொடர்ந்தும் நீதித்துறை எப்படி செத்துக்கிடக்கும். அது தமிழர்களுக்கான நீதியை எப்படி வழங்கும் என்பதை வெளி உலகத்துக்கு வெளிப்படுத்த நாளை (இன்று) திங்கட்கிழமை 9.30 மணியிலிருந்து 10.30 மணிவரை

11

# எரிபொருட்களின் விலைகள் உயர்வு

கொழும்பு, ஒக். 02

நள்ளிரவு முதல் எரிபொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன என்று இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

இதன்படி, 92 ஒக்ரைன் ரக பெற்றோல் 4 ரூபாய் அதிகரித்து லீற்றர் 365 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 95 ஒக்ரைன் ரக பெற்றோல் 3 ரூபாய் உயர்ந்து லீற்றர் 420 ரூபாயாகவும் ஒட்டோ டீசல் 10 ரூபாய் அதிகரித்து லீற்றர் 351 ரூபாயாகவும் சுப்பர் டீசல் 62 ரூபாய் உயர்ந்து

11

# விபத்தில் இளைஞர் உயிரிழப்பு

முல்லைத்தீவு, ஒக். 02

வேகக்கட்டுப் பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் கால்வாய்க்குள் வீழ்ந்ததில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

புதுக்குடியிருப்பு - கோம்பாவில் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

11

# நாளொன்றில் ஐந்து சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள்!

கொழும்பு, ஒக். 02

நாளொன்றில் சராசரியாக ஐந்து சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் பதிவாகின்றன என்று சிறுவர் மற்றும் பெண்கள் பணியகத்துக்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் ரேணுகா ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

சிறுவர் தினத்தை முன்னிட்டு செய்தியாளர்களை சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த வருடத்தின் முதல் ஆறு மாதங்களில் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் வேகமாக அதிகரித்துள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, சமூக ஊடகங்களின் தவறான பயன்பாடு காரணமாக சிறுவர்கள் சமூக விரோத

11

# எரிவாயுவின் விலை உயரும்!

கொழும்பு, ஒக். 02

உலக சந்தையில் எரிவாயுவின் விலை அதிகரித்துள்ள நிலையில் நாட்டிலும் எரிவாயுவின் விலை அதிகரிக்கப்படும் என்று கூறப்படுகின்றது.

இந்த நிலையில், இந்த மாதத்துக்கான எரிவாயு விலை திருத்தம் நாளை மறுதினம்

11

# பௌத்தம் சிங்களவர்களுக்கு மாத்திரம் சொந்தமானதல்ல!

## மனோ, கம்மன்பில, கோபால் பாக்லே மத்தியில் பான்டே வல்பொல தேரர்!

கொழும்பு, ஒக். 02

பௌத்தம் என்பது சிங்கள பௌத்தர்களுக்கு மாத்திரம் சொந்தமானது அல்ல. அது முழு உலகுக்கும் சொந்தமானது. பௌத்த தர்ம வளர்ச்சிக்கு தமிழ் பௌத்தர்கள், தமிழ் சங்க காலம் தொட்டு பெரிய பங்களிப்புகளை வழங்கி உள்ளார்கள். அதையிட்டு

11



# இப்படியும் நடக்கிறது

அந்தக் காலத்தில் தமிழக சஞ்சி கைகளில் ஒவ்வொரு பக்கத்திலும் ஒரு நகைச்சுவை துணுக்கு போட்டிருப்பார்கள். அந்தத் துணுக்குகளைப் படிப்பதற்காகவே பூபாலசிங்கம் புத்தகக் கடையில் ஓடர் கொடுத்துவைத்து தமிழக சஞ்சிகைகளை வாங்கிப் படிப்ப துண்டு.

முன்னர் ஒரு தடவை அப்படிப் படித்த ஒரு துணுக்கு இப்போது ஞாபகத்துக்கு வருகின்றது.

வழக்கறிஞர்: (நீதிமன்றத்தில்) அந்தக் கொள்ளை எப்பொழுது நடந்தது?

சாட்சி : நான் சிந்தித்துச் சொல்கிறேன்.

வழக்கறிஞர்: உனக்கு என்ன தெரியும் என்பதை இந்த நீதிமன் றத்திற்குச் சொல். நீ என்ன சிந்திக் கிறாய் என்பது இங்கே தேவை யில்லை.

சாட்சி : நான் சிந்தித்துப் பேசு வது உங்களுக்குப் பிடிக்கவில்லை என்றால் என்னை வெளியே செல்ல அனுமதியுங்கள். சிந்திக்கா மல் எதையும் பேச நான் உங்க ளைப்போல வழக்கறிஞர் அல்ல.

இந்தப் பத்தியில் இனி எழுதப்போகின்ற விடயம் சட்டத் தரணியோடு சம்பந்தப்பட்டதால் இந்த துணுக்கு ஞாபகத்துக்கு வந்தது.

சனல் - நான்கு ஆவணப்படம் ஏற்படுத்திய அதிர்வலைகள் ஓய்ந்து இப்போது முல்லைத்தீவு நீதிவான் அந்த இடத்தை பிடித்தி ருக்கிறார்.

அவர் மீதான அச்சுறுத்தல் பற்றிய செய்திகள் தமிழ் மக்க ளுக்கு புதியவை அல்ல. ஆனால், அவர் நாட்டைவிட்டு வெளி யேறியமை தொடர்பாக பலரும் பல்வேறு ஊகங்களை சமூக வலைத்தளங்களில் பதிவிட்டு வருகின்றனர்.

அவருக்கு ஏற்பட்ட அழுத்தம் அவருக்கு மாத்திரமே உணர்ந்து கொள்ளக்கூடியது என்பதில் இரு வேறு கருத்துகள் இருக்கமுடி யாது. ஆனால், ஒரு நீதிபதிக்கே இந்த நிலை என்றால் சாதாரண தமிழ் மக்களின் நிலை என்ன என்று கேள்வி கேட்காதவர்கள் இல்லை.

அவரைப் பாராட்டவேண்டும் என்பதற்காக ஒருவர் அவரின் தீர்ப்பின் பிரதி ஒன்றை அப்படியே படம் எடுத்து அதிலுள்ள ஒரு வசனத்தை தனது முகநூலில் பதி விட்டிருக்கிறார். அவ்வாறு பதிவிட்டவர் சாதாரண பிரஜை அல்ல. அவரும் ஒரு சட்டத்தரணி. தமிழ் தேசிய கட்சியொன்றின் பேச்சாளர்.

பதவி விலகிய முல்லைத்தீவு நீதிவானின் அந்தத் தீர்ப்பு, தியாகி திலீபனின் நினைவு வைபவங்க ளுக்கு தடை விதிக்கக்கோரி பொலிஸார் தாக்கல் செய்த வழக்கில் அவர் வழங்கிய தீர்ப்பி லிருந்து எடுக்கப்பட்டது.

அந்த தீர்ப்பில் நீதிவான் சொல்லியிருப்பது:

'உண்மையில் இராசையா பார்த்தீபன் அல்லது திலீபன் என்பவர் தமிழ் மக்களின் உள்ளங் களில் ஒரு தியாக தீபமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார். அவரை நினைவுகூருவதை தடை செய்தாலேயே பொதுமக்கள் மத்தியில் அமைதியின்மை ஏற்படு மென்று மன்று கருதுகின்றது'.

இதுதான் அந்த தீர்ப்பின் ஒரு வசனம். அதாவது திலீபன் பற்றிய அவரின் கருத்து அவரின் சொந்த கருத்தாக இருந்திருந்தால் அது தவறானதல்லதான். ஆனால், அவர் தனது மனதிலுள்ளதை தீர்ப் பில் எழுதியிருப்பது ஏற்றுக்கொள் ளக்கூடியதா என்று தெரிய வில்லை. அவர்தான் தீர்ப்பில் அதனை எழுதினார் என்றால் அதனை பொதுவெளியில் வெளி யிடுவது பற்றி கொஞ்சமென்றா லும் யோசிக்க வேண்டாமா?

இன்று அவர்மீது தெற்கில் சமூகவலைத்தளங்களில் பேசு பொருளாகியிருப்பது அவர் தனது தீர்ப்பில் சொல்லியுள்ள இந்த வாக்கியம்தான்.

இதுபற்றிய தகவலை பகிர்ந்து கொண்ட ஒரு தமிழ் அரசியல் வாதி, அவர் மீதான மற்றுமொரு கேள்வியையும் கேட்டார். அவர் தனது பெயரில் வழக்குகள் இருக் கின்றன என்று சொல்லியிருக்கி றாரே, அது எப்படி ஒரு நீதிவா னின் பெயரில் அவருக்கு எதிராக வழக்கு போடமுடியும்? என்று.

உண்மைதான். ஒரு நீதிவானின் தனிப்பட்ட பெயரில் வழக்கு தாக்கல் செய்யமுடியாதுதான். ஆனால், அதனையும் இலங்கை நீதித்துறை வரலாற்றில் செய்து காட்டியவர்கள் நாங்கள்தானே. அப்போது கல்முனை நீதிபதியாக இருந்த மா. கணேசராஜா மீது அவர் பெயரிலேயே அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்த நமது சட்ட மேதைகள்தான் அதற்கும் வழிசொல்லிக்கொடுத்த வர்கள்.

இந்தப் பத்தியை எழுதுவதற் காக யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு சட்டத்தரணியுடன் பேசியபோது அவர் சில கேள்விகளைக் கேட் டார்.

'தனது பொலிஸ் பாதுகாப்பு குறைக்கப்பட்டதாக பதவி விலகிய நீதிபதி தெரிவித்திருந் தார். ஆனால், அதனை பொலிஸ் பேச்சாளர் மறுத்திருக்கிறார். தன்னை சட்டமா அதிபர் அலுவ லகத்துக்கு அழைத்து தனது கட்ட ளையை மாற்றுமாறு சட்டமா அதிபர் வற்புறுத்தினார் என்று தெரிவித்திருக்கிறார். ஆனால், அப்படி அவரை அழைக்கவில்லை என்றும் தொலைபேசியிலேயே பேசியதாகவும் தெரிவிக்கப்பட்டி ருக்கின்றது. அதேவேளை வழங் கிய கட்டளையை மாற்றுங்கள் என்று ஒரு சட்டம் தெரிந்த எவரும் கேட்கமாட்டார்கள் என்பது புரிந்துகொள்ளக் கூடியதே. அப்படியிருக்கையில் மிகப்பாரதூரமான குற்றச் சாட்டை நீதிபதி தெரிவித்திருக்கி றார். அப்படி அவர் கேட்டார் என்பதையும் அவர் நிரூபிக்கவேண் டிய நிலையில் இருக்கிறார். அதை விட தனக்கு அச்சுறுத்தல் விடுக் கப்படுகிறது என்றால் அவர் அது பற்றி முதலில் பொலிஸில் முறைப்பாடு செய்திருக்கவேண் டும். ஒரு நீதிபதியே இதனைச் செய்யாதபோது சாதாரணமான வர்கள் எப்படி எதிர்கொள்வார் கள்' என்றார்.

அதனால்தான் நேற்று இந்தப் பத்தியில் நீதிபதி பதவி விலகியி ருந்தாலும், நாட்டில் நின்று தனது தீர்ப்பு சரியானது என்பதற்காக போராடியிருக்க வேண்டும் என்று எழுதியிருந்தேன்...!

-ஊர்க்குருவி.

# ஜனாதிபதி ரணில் நாடு திரும்பினார்

கொழும்பு, ஒக். 02

ஜேர்மனியில் நடை பெற்ற பேர்லின் சர்வதேச மாநாட்டில் கலந்து கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட தூ துக்குழுவினர் நேற்று நாடு திரும்பினர்.

ஜனாதிபதி உட்பட தூதுக் குழுவினர் நாளை காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த தாக விமான நிலைய அதி காரிகள் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி உட்பட்ட தூதுக் குழுவினர் ஜேர்மனி யின் பேர்லின் நகரில் இருந்து கட்டார் நாட்டுக்கு சென்று அங்கிருந்து நேற்று காலை 9.35 அளவில் கட் டார் விமான சேவைக்கு சொந்தமான விமானத்தில் கட்டுநாயக்க விமான நிலை யத்தை வந்தடைந்துள்ளனர்.

# நேபாளத்துக்கான விமான சேவை திடீரென இரத்து செய்யப்பட்டது!

கொழும்பு, ஒக். 02

நேபாளத்தின் தலைநகர் காத்மண்டுவுக்கு நேற்று காலை கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து புறப்பட வேண்டிய விமானம் இரத்து செய்யப்பட்டதால் 200இற் கும் மேற்பட்ட பயணிகள் பாதிக்கப்பட்டனர்.

இந்தப் பயணிகளில் இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடியும் ஒருவராவார்.

இந்த சிறீ லங்கன் ஏர் லைன்ஸ் விமானம் UL-181 கட்டுநாயக்க விமான நிலை யத்திலிருந்து நேற்று காலை 08.20 மணிக்கு நேபாளத் தின் காத்மண்டுவுக்கு புறப்படவிருந்தது.

அதற்காக காலை 07.15 மணிக்கு இராஜாங்க அமைச் சர் உட்பட 200இற்கும் மேற்பட்ட பயணிகள் இந்த விமானத்துக்கு அழைத்து வரப்பட்டனர். ஆனால், இந்த விமானம் காலை 11.00 மணி வரை கட்டுநாயக்க விமான நிலையத்தை விட்டு வெளியேறவில்லை, அது வரை பயணிகளும் விமானத் தில் காத்திருந்தனர்.

பின்னர், குறித்த விமா னத்தில் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டதால், இந்த விமானத்துக்கு பதி லாக வேறு விமானம் வழங் கப்படும் என அறிவிக்கப்பட் டும் அது நிறைவேற வில்லை. இந்நிலையில், நேபாளத்துக்கான நேற்றைய விமான சேவை இரத்துச் செய்யப்பட்டது.

# 45 கிலோ வல்லப்பட்டைகளுடன் ஓய்வுபெற்ற வங்கி ஊழியர் கைது!

கொழும்பு, ஒக். 02

45 கிலோகிராம் வல்லப் பட்டையை காரில் கடத்திச் சென்ற ஓய்வு பெற்ற வங்கி அதிகாரி ஒருவரை களுத் துறை - பாணந்துறை வலன மத்திய ஊழல் தடுப்பு பிரிவி னர் நேற்று கைது செய்துள் ளனர்.

பேருவளை ஹெட்டி முல்ல பிரதேசத்தை சேர்ந்த 63 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப் பட்டாரெனப் பொலிஸார் தெரிவித்தனர்.

களுத்துறை வடக்கு கடற்கரை சந்தியில் காரை நிறுத்திய குற்றத்தடுப்புப் பிரிவின் பிரதான பொலிஸ் பரிசோதகர் உள்ளிட்ட அதி காரிகள் குழு காரில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 45 கிலோ வல்லப்பட்டையை கண்டு பிடித்து காரை கைப் பற்றியதோடு குறித்த நபரை யும் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# நாவலப்பிட்டி பாடசாலைகளில் மாணவர் இடைவிலகல் உயர்வு!

## மகிந்தானந்த எம். பி. தெரிவிப்பு

கண்டி, ஒக். 02

நாவலப்பிட்டி பிரதேசத்தில் தோட்டங் களுக்கு அருகில் அமைந்துள்ள தோட்ட பாட சாலைகளில் 30வீத பிள்ளைகள் பாடசாலைக்கு செல்வதில்லை. இங்கு பெருமளவில் பாட சாலை இடைவிலகல்கள் காணப்படுகின்றன என்று கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பி னர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

நாவலப்பிட்டி கதிரேசன் இந்து மகளிர் கல்லூரியின் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

"நாவலப்பிட்டி நகர எல்லையிலுள்ள தமிழ்ப் பாடசாலைகளின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி செய்யப்பட்ட போதிலும், பிள் ளைகளின் கல்வித் தரம் உயர்ந்ததாக இல்லை. பரீட்சை பெறுபேறுகளின்படி நாவலப் பிட்டி பிரதேசத்தில் பரீட்சை பெறுபேறுகள் குறைந்த மட்டத்தில் காணப்படுகிறது. ஆசிரி யர் பற்றாக்குறையே இதற்குக் காரணம்.

அரசாங்கம் அனுமதித்தால் நாவலப்பிட்டி பிரதேசத்திலுள்ள தமிழ் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும். நாவலப் பிட்டி மாவட்ட அரசாங்க அதிபராக சேவையாற்று வதற்கும் மற்றும் பல வைத்தியர்கள் நாவலப் பிட்டி பிரதேசத்திலிருந்து உருவாகவேண்டும்.

பாடசாலைகளில் ஆசிரியர்களின் பங்களிப்பு உயர் மட்டத்தில் இருக்க வேண்டும். கல்வி மற் றும் விளையாட்டுக்காக நாவலப்பிட்டி பிர தேசத்தில் இருந்து சிறந்த மாணவர்களை நாம் உருவாக்க வேண்டும்" - என்றும் கூறினார்.

# முல்லைத்தீவு நீதிபதிக்கு நேர்ந்தது ஆச்சரியமல்ல!

## புதிய ஜனநாயக மார்க்சிஸ லெனினிஸ கட்சி

வடமராட்சி, ஒக். 02

இலங்கையில் ஏற்கனவே ஜனநாயகமும் சட்ட ஆட்சி யும் பக்கசார்பாக இருந்து வரும் அரசியல் சூழலில் முல் லைத்தீவு நீதிமன்ற நீதிப திக்கு நேர்ந்துள்ள கதி ஆச்ச ரியம் தரும் ஒன்றல்ல என புதிய ஜனநாயக மார்க்சிஸ லெனினிஸ கட்சி தெரிவித் துள்ளது.

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி அச்சுறுத்தல் மற்றும் நிர்ப்பந்தம் காரணமாக பதவி விலகியது தொடர்பில் அக்கட்சி வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ் வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே ஜனநாயகமும் சட்ட ஆட்சியும் பக்கசார் பாக இருந்து வரும் அரசி யல் சூழலில் முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதிக்கு நேர்ந் துள்ள கதி ஆச்சரியம் தரும் ஒன்றல்ல. ஆளும் வர்க்க உயர்மட்ட அரசியல் சக்தி களும், அரச நிறுவன உயர் அதிகாரிகளும், சிங்கள பௌத்த பேரினவாத வெறி யர்களும், இதில் சம்மந்தப் பட்டிருப்பதாகவே நம்பப் படுகிறது. எனவே உண்மை யான மக்கள் ஜனநாயகத் தையும், நீதி, நியாயத்தை யும், ஆதரித்து நிற்கும் அனைத்து சக்திகளோடும், மக்களோடும், இணைந்து நின்று முல்லைத்தீவு நீதி மன்ற நீதிபதிக்கு இழைக்கப் பட்டுள்ள அநீதியை எமது புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி மிக வன் மையாகக் கண்டிக்கிறது- என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ஐ-02)

ஈழநாடு
Eelanadu
02.10.2023 திங்கட்கிழமை
சோபகிருது வருடம், புரட்டாதி 15

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 205 2300**

# குத்துவிளக்கு கூட்டு?

குத்துவிளக்கு சின்னத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பாக இயங்கி வரும் கட்சிகளை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் தனித்து இயங்கப் போவதாக அறிவித்திருக்கின்றனர். விரைவில், வரவு - செலவுத் திட்ட விவாதம் இடம்பெறவுள்ள நிலையில் இவ்வாறானதொரு முடிவை குறித்த கூட்டமைப்பினர் அறிவித்திருக்கின்றனர். உள்ளூராட்சி தேர்தலை முன்வைத்து அதுவரை கூட்டமைப்பின் தாய் கட்சியாக இருந்த இலங்கை தமிழரசு கட்சி தனியாகப் பயணிக்கும் முடிவை அறிவித்தது.

இதனைத் தொடர்ந்து இரண்டு தசாப்தகால தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிளவுற்றது. தேர்தலில் தனித்துப் போட்டியிட்டாலும், நாங்கள் கூட்டமைப்பாகத்தான் இயங்குவோம் என்றவாறான அபிப்பிராயங்களை தமிழரசு கட்சியின் தலைவர்கள் வெளியிட்டபோதிலும் கூட நடைமுறை வேறாகவே இருந்தது. நடைபெறாத உள்ளூராட்சி தேர்தலை முன்வைத்து இரண்டு தரப்பினரும் பொதுவெளிகளில் மோதிக் கொண்டனர். தேர்தல் நடைபெறாது என்னும் நிலையில் தான் இவர்களின் சண்டைகள் முடிவுற்றன. எனினும், பாராளுமன்றத்தில் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் போன்றே செயல்பட்டனர். தற்போது அந்த நிலைமையை மாற்றியமைக்கவுள்ளதாகக் கூறுகின்றனர்.

தமிழ்த் தேசிய அரசியல் என்பது அடிப்படையில் தேர்தலில் வெற்றி பெறுவோரால் தீர்மானிக்கப்படும் ஒன்றாகவே சுருங்கிவிட்டது. எனவே, அரசியல் கூட்டுகளின் பிரதான இலக்கு தேர்தல்தான் - ஏனெனில், தேர்தலில் வெற்றிபெறாதவர்கள் அரசியல் அரங்கில் கோலோச்ச முடியாதவொரு நிலைமை காணப்படுகின்றது. மக்கள் இயக்கம், சிவில் சமூகக் கட்டமைப்புகளை பலப்படுத்துதல் - என்றெல்லாம் அவ்வப்போது கதைகள் பேசியபோதிலும்கூட, அவைகள் அனைத்தும் விழலுக்கு இறைத்த நீரானதே வரலாறு.

இந்த நிலையில், அடுத்த தேர்தலில் பாராளுமன்ற ஆசனங்களை தக்கவைத்துக் கொள்ளக்கூடிய வாய்ப்பைப் பெறும் கட்சிகள் மட்டுமே அரசியல் நீரோட்டத்தில் நீந்தமுடியும். மற்றையவை காணாமல் போய்விடும். ஏனெனில், பாராளுமன்ற ஆசனங்கள் இல்லாவிட்டாலும் தங்களுக்கென்று ஓர் அரசியல் வேலைத்திட்டத்தை முன்னெடுத்து அதன் மூலம் தங்களை தக்கவைக்கும் வல்லமையோடு எந்தவொரு கட்சியும் இல்லை.

ஒப்பீட்டு அடிப்படையில் பரந்த கூட்டணியென்னும் அடையாளத்தை குத்துவிளக்கு சின்னத்திலுள்ள கூட்டமைப்பினரே கொண்டிருக்கின்றனர். ஆனால், அவர்களின் அரசியல் செயல்பாடு பூச்சியமாக இருக்கின்றது. சில கட்சிகள் சேர்ந்துவிடுவதால் மட்டும் அது ஒரு கூட்டமைப்பாகப் பரிணமித்துவிடாது. அரசியல் வேலைத்திட்டம் ஒன்றின் மூலமே ஒரு கூட்டமைப்பு கூட்டமைப்பாக முன்னேற முடியும். அப்போதுதான் மக்களும் அதன் பக்கமாகத் திரும்புவர்.

வடக்கு - கிழக்கில் மாதந்தோறும் மக்கள் சந்திப்புகளை நடத்தும் கட்சி எது? சமகால அரசியல் தொடர்பில் மக்களுக்கு தெளிவூட்டும் கட்சி எது? குத்துவிளக்கு சின்னத்தில் ஒன்றிணைந்துள்ள கூட்டமைப்பிடமிருந்து, அவ்வாறான விடயங்களையே மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால், அது நடைபெறவில்லை. வெறுமனே ஊடக அறிக்கைகளை வெளியிடுவதற்கும் அவ்வப்போது நிகழும் விடயங்களுக்கு எதிர்ப்புகளை பதிவு செய்வதாலும் மட்டும் ஓர் அரசியல் கூட்டு உருவாகிவிடாது. குத்துவிளக்கு கூட்டமைப்பினர் இது தொடர்பில் சிந்திக்க வேண்டும். வலுவானதோர் அரசியல் தலைமைத்துவத்தை வழங்குவதற்கு ஏற்றவாறான அரசியல் ஒழுக்கத்தை நிரூபிக்க வேண்டும். அதற்கான உள்ளாற்றல் இந்த அணியினரிடம் உண்டு.

# பொருளாதார, ஆட்சிமுறை சீர்திருத்தங்கள் மீது முன்னுரிமை அடிப்படையில் கவனம் செலுத்துக!

சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவித் திட்டத்தின் இரண்டாவது தவணைக் கொடுப்பனவை பெறுவதற்கு அரசாங்கம் தவறியிருப்பது எமது பொருளாதாரத்தின் ஆபத்தான நிலைமையை வெளிக்காட்டுகிறது. இலங்கையின் பொருளாதார மீட்சி இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை என்று சர்வதேச நாணய நிதியம் கூறியிருக்கிறது.

நிர்ணயிக்கப்பட்ட பொருளாதார இலக்குகளை குறிப்பாக அரசாங்கத்தின் வருவாய்ப் பெருக்கத்தில் ஏற்படக்கூடிய ஒரு வீழ்ச்சியின் விளைவான பட்ஜெட் பற்றாக் குறையை குறைப்பது தொடர்பிலான இலக்குகளை அரசாங்கம் அடையவில்லை என்றும் சர்வதேச நாணய நிதியம் கூறியிருக் கிறது.

ஸ்ரீ லங்கா ஜாதிக சாம மண்டலய
தேசிய சமாதானப் பேரவை
National Peace Council of Sri Lanka

330 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இரண்டாவது தவணைக் கொடுப்பனவை வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியம் தற்போதைய தருணத்தில் மறுத்திருப்பது இலங்கையின் பொருளாதாரத்தில் முதலீடுகளைச் செய்ய முன்வரக்கூடியவர்கள் மத்தியில் நம்பிக்கையை அருகச்செய்துவிடும்.

அலுவலர் மட்ட இணக்கப்பாட்டை எட்டிய பின்னரே உதவித் திட்டத்தின் கீழான இரண்டாவது தவணைக் கொடுப்பனவு விடுவிக்கப்படும் என்றும் அது எப்போது நடைபெறும் என்பதற்கு நிர்ணயிக்கப்பட்ட ஒரு கால அட்டவணை கிடையாது என்றும் சர்வதேச நாணய சபை கூறியிருக்கிறது.

அந்த நிபந்தனைகளில் பலவற்றை நிறைவேற்ற அரசாங்கம் தவறியமை பொருளாதார சீர்திருத்த செயன்முறை மீதான அதன் பற்றுறுதிமீதான நம்பிக்கையை இழக்கச் செய்திருக்கிறது. நாடும் மக்களும் முகங்கொடுக்கும் பொருளாதார சவால்களின் பாரதூரத்தன்மையை கருத்தில் கொண்டு எதிர்க்கட்சிகளுடன் கலந்தாலோசித்து ஆட்சிமுறைப் பிரச்னைகளை கையாளுமாறு நாம் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறோம்.

எதிர்க்கட்சிகளுக்கு அரசாங்கம் அழைப்பு விடுக்கவேண்டும் என்றும் அவ்வாறு விடுக்கப்படக்கூடிய அழைப்புக்கு எதிர்க்கட்சிகள் சாதகமான முறையில் பதிலளித்து சர்வதேச நாணய நிதியத்தின் உதவித் திட்டம் குறித்து ஆராய வேண்டும் என்றும் தேசிய சமாதானப் பேரவை வலியுறுத்துகிறது.

அவசியமானால் அந்த உதவித்திட்டத்தில் திருத்தங்களைச் செய்வதற்கான வழிவகைகளை ஆராய்ந்து நாட்டு மக்களில் பெரும் பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய நிலையில் இருக்கும் பிரிவினரின் நலன்களை மனதிற்கொண்டு இரு தரப்பு கருத்தொருமிப்பு உணர்வுடன் அரசாங்கமும் எதிர்க்கட்சிகளும் நடந்து கொள்ளவேண்டும்.

பொருளாதாரத்தை சரியான தடத்தில் வைக்க வேண்டுமானால் அரசாங்கம் கவனிக்கவேண்டிய மையப் பிரச்சினைகள் ஆட்சிமுறையுடன் தொடர்புடையவையே என்று தேசிய சமாதானப் பேரவை நம்புகிறது.

ஆட்சிமுறையின் குறைபாடுகளே ஊழலுக்கும் தண்டனையின்மைக்கும் வழிவகுத்தன. பொருளாதார இடர்பாடுகளுக்கு முகங்கொடுப்பதில் மக்களால் எதிர்நோக்கப்படும் துன்பங்கள் அதிகரித்த வண்ணம் இருக் கின்றன. இந்த சூழ்நிலை போராட்டங்களுக்கு வழிவகுக்கலாம். இது சர்வதேச நாணய நிதியத்துடன் காணப்பட்ட பொருளாதார சீர்திருத்தச் செயல்திட்டத்துக்கு பாதிப்பாக அமையும் ஆபத்தைக் கொண்டுள்ளது. அடுத்த வாரம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் மற்றும் இணைய வெளி பாதுகாப்பு சட்டமூலம் போன்றவற்றைப் பயன்படுத்தி மக்களின் போராட்டங்களையும் கண்டனங்களையும் ஒடுக்குவதற்கு அரசாங்கம் மேற்கொள்ளக்கூடிய முயற்சிகள் நிலைவரத்தை மேலும் மோசமாக்கும் என்று நாம் விசனமடைகிறோம்.


பயங்கரவாத தடைச்சட்டத்தை பதிலீடு செய்வதற்கான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூல வரைவு அதன் வீச்செல்லையில் அகல்விரிவானதாக இருப்பதுடன் பொதுப் போராட்டத்தில் அல்லது தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுகின்றவர்களை கைது செய்வதற்கான அதிகாரத்தை அரசாங்கத்துக்கு வழங்குகிறது. பொதுமக்களை அல்லது பொதுமக்களில் ஒரு பிரிவினைரை அச்சுறுத்தியதாக குற்றஞ்சாட்டப்படுபவர்களை இந்த சட்டத்தின் கீழ் கைதுசெய்ய முடியும்.

தவறான அறிக்கைகள் அல்லது அச்சுறுத்தல்கள் மற்றும் வேதனையை ஏற்படுத்தக்கூடிய கூற்றுக்களில் இருந்து ஆட்களை பாதுகாப்பதை நோக்கமாக கொண்டதே இணையவெளி பாதுகாப்பு சட்டமூலம் என்று கூறப்படுகிறது.

ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட ஆணைக்குழு ஒன்றை நியமிப்பதற்கான ஏற்பாடு இந்த சட்டமூலத்தில் இருக்கிறது. எந்தவொரு சமூக ஊடகக் கணக்கையும் அல்லது இணையவெளி பிரசுரத்தையும் இந்த ஆணைக்குழுவால் தடை செய்யவோ அல்லது இடைநிறுத்தவோ முடியும் என்பதுடன் பெருமளவுக்கு உள்ளுணர்வு சார்ந்தவையாக அமையக்கூடிய குற்றச்செயல்களுக்கு சிறைத்தண்டனையையும் சிபாரிசு செய்யக்கூடியதாக இருக்கும்.

அதனால் இந்த இரு ஜனநாயக விரோத சட்டமூலங்களையும் உடனடியாக வாபஸ் பெறுமாறும் பொருளாதார பிரச்னைகளை குறிப்பாக சர்வதேச நாணய நிதியத்தால் கிளப்பப்பபட்ட பிரச்னைகளை கையாள்வதில் அக்கறை காட்டுமாறும் அரசாங்கத்தை நாம் கோருகிறோம்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் வெளுத்ததெல்லாம் பாலாக நினைத்து சிலரிடம் பேசி சிக்கிக் கொள்ளாதீர்கள். அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள். கவனம் தேவைப்படும் நாள்.

**இடபம்**
திட்டமிட்ட காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி லாபம் வரும். பணிகளை போராடி முடிக்க வேண்டி வரும். உழைக்க வேண்டிய நாள்.

**மிதுனம்**
எதிலும் வெற்றி பெறுவீர்கள். பெற்றோரின் ஆதரவு கிட்டும். நாடிவந்தவர்களுக்கு உதவி செய்வீர்கள். சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**கடகம்**
சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். உங்களால் பயனடைந்தவர்கள் உதவி செய்வார்கள். வியாபாரத்தில் மாற்றம் லாபம் ஈட்டுவீர்கள். புதிய முயற்சிகள் பலிதமாகும். சாதிக்கும் நாள்.

**சிம்மம்**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். அரைகுறையாக நின்ற வேலைகள் முடிவடையும். உடல் நலம் சீராகும். வியாபாரத்தில் இழப்புகளை சரி செய்வீர்கள். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும்.

**கன்னி**
சந்திராஷ்டமம் இருப்பதால் பல வேலைகள் தடைப்பட்டு முடியும். உதவி செய்ய போய் உபத்திரவத்தில் சிக்கிக் கொள்ளாதீர்கள். சலுகைகள் தாமதமாக கிடைக்கும். பொறுமை தேவைப்படும்.

**துலாம்**
உங்கள் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் பெரிய பொறுப்புகள் தேடி வரும். திறமைகள் வெளிப்படும் நாள்.

**விருட்சிகம்**
எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். உயரதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்து கொள்வீர்கள். நினைத்த காரியம் நிறைவேறும் நாள்.

**தனுசு**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களை மாற்றுவீர்கள். சகஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள். நன்மை நடக்கும் நாள்.

**மகரம்**
பால்ய நண்பர்கள் உதவுவார்கள். வெளிவட்டாரத் தொடர்புகள் அதிகரிக்கும். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். உரிமைகள் கிடைக்கும். உழைப்பால் உயரும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். மாறுபட்ட அணுகுமுறையால் சாதிக்கும் நாள்.

**மீனம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் அதிகரிக்கும். வியாபாரத்தில் புது முயற்சிகள் பலிதமாகும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**பாராளுமன்ற தேர்தல்:**

# தமிழகத்தில் 30 இடங்களில் பா. ஜ. கட்சி போட்டியிடும்!

சென்னை, ஒக். 02

பாராளுமன்றத் தேர்தலில் தமிழகத்தில் 30 தொகுதிகளில் பா. ஜ. க. போட்டியிட முடிவு செய்துள்ளது. உளவுத்துறை அறிக்கை அடிப்படையில் மக்களிடம் செல்வாக்கு உள்ள நபர்களை வேட்பாளர்களாக களமிறக்கவும் அந்தக் கட்சி திட்டமிட்டுள்ளது.

இது குறித்து பா. ஜ. க. வட்டாரங்கள் கூறியவை வருமாறு,

சட்டசபை தேர்தலின் போது கூட்டணி தர்மப்படி பா. ஜ. க. வேட்பாளர்களின் வெற்றிக்கு அ. தி. மு. க. நிர்வாகிகள் தேர்தல் பணியாற்றி இருந்தால் 10 தொகுதிகளுக்கு மேல் பா. ஜ. க. வெற்றி பெற்றிருக்கும்.

இதேசமயம் அ.தி.மு.க. வினரின் வெற்றிக்கு பா. ஜ. க. தொண்டர்கள் கடுமையாக உழைத்தனர்.

மாவட்ட வாரியாக அண்ணாமலை பங்கேற்ற போராட்டம் பாத யாத்திரை போன்றவற்றால் தமிழகம் முழுதும் பா. ஜ. கவுக்கு ஓட்டு வங்கி 20 சதவீதத்துக்கு மேல் அதிகரித்துள்ளது.

கூட்டணிக்கு தலைமை வகித்த அ.தி.மு.க. தற்போது கூட்டணியில் இருந்து விலகியது. பாராளுமன்றத் தேர்தல் பிரதமர் பதவியை மையமாக வைத்து நடக்கிறது. பா. ஜ. க. வேட்பாளராக பிரதமர் மோடி இருக்கிறார்.

தி.மு.க. இடம் பெற்றுள்ள ‘இந்தியா’ கூட்டணி பிரதமர் வேட்பாளரை அறிவிக்கவில்லை. பிரதமராக மோடி வரவேண்டும் என்பதற்காகவே தமிழக மக்கள் வாக்களிக்கவுள்ளனர்.

எனவே தமிழகத்தில் 30 தொகுதிகளில் பா. ஜ. க. போட்டியிட முடிவு செய்துள்ளது. மீதியுள்ள 10 தொகுதிகள் தே.மு.தி.க. மற்றும் நான்கு சிறு கட்சிகளுக்கு ஒதுக்கப்படும். திராவிட கட்சிகள் எந்த பலத்தை எதிர்கொண்டு தேர்தலை சந்திக்கின்றனவோ அவை அனைத்தையும் பா. ஜ. கவும் களமிறக்க தயாராகி வருகிறது - என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# அரசியலில் இருந்து விலகினால் விவசாயத்தில் ஈடுபடுவேன்!

## பா. ஜ. க. தமிழக தலைவர்



கோவை, ஒக். 02

“அரசியலில் கட்டாயப்படுத்தி நான் இல்லை. அரசியலில் இருந்து விலகினால் தோட்டத்தில் விவசாயம் பார்ப்பேன்”, என தமிழக பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

மேலும், மூன்று ஆண்டுகளுக்கு முன்பு அரசியலுக்கு வரும் போது தூய்மையான அரசியல் என்னும் கனவோடு வந்தேன். ஆனால், அரசியலில் 30 சதவீதம் மட்டுமே நேர்மறையான எண்ணங்கள் உள்ளன. 70 சதவீதம் எதிர்மறையான எண்ணங்கள் உள்ளன.

அரசியலில் கட்டாயப்படுத்தி நான் இல்லை. இருக்க வேண்டும் என இருக்கிறேன். என்னை விட்டு விட்டால் தோட்டத்துக்கு சென்று விவசாயம் பார்ப்பேன். முதலில் மக்கள் மாற வேண்டும். தூய்மையான அரசியலுக்கு மக்கள் தயாரானால் அரசியல்வாதிகளும் தங்களை மாற்றி கொள்வார்கள்.

கூட்டணி குறித்து தேசிய தலைவர்கள் அறிவிப்பார்கள். அவரவர் கட்சியை பலப்படுத்துவது, அவரவருக்கு நோக்கம். எனது நோக்கம் பா. ஜ. கவை வலுப்படுத்துவது. இந்தியாவில் முக்கியமான மாநிலங்களில் ஒன்றாக தமிழகம் உள்ளது. அதை மேலும் வலுப்படுத்த விரும்புகிறேன் - என்றார்.

(ஐ)

# காவிரி தண்ணீர் விவகாரத்தில் சகல கட்சி கூட்டத்தை கூட்டுக!

## அ. தி. மு. க. பொதுச் செயலர்

சென்னை, ஒக். 02

காவிரி விவகாரத்தில் உடனடியாக அனைத்து கட்சிக் கூட்டத்தை கூட்ட வேண்டும் என அ. தி. மு. க. பொதுச்செயலர் எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

தி. மு. க. அரசு கும்ப கர்ணன் போல் தூங்கிவிட்டு, மேட்டூர் அணையில் இருந்த நீரையெல்லாம் காலி செய்தபின் பெயருக்கு மத்திய அரசை காரணம் காட்டி காலதாமதம் செய்ததை தவிர, காவிரி நீர் பிரச்னைக்கு எந்தஒரு துரும்பையும் கிள்ளிப் போடவில்லை. டெல்டா விவசாயிகள் உள்ளிட்ட தமிழக மக்கள் மீது அரசின் முதல்வர் ஸ்டாலினுக்கு அக்கறை இருந்திருந்தால், கடந்த ஜூன் மாதத்தில் கர்நாடகத்தில் தனது கூட்டணி கட்சியான காங்கிரஸ் கட்சியின்



சார்பில் நடைபெற்ற பதவியேற்பு விழாவில் கலந்துகொண்ட போது, அணைகளில் தண்ணீர் அதிகமாக இருந்த சமயத்தில், அவர்களுடன் நட்பாகப் பேசி காவிரியில் தண்ணீரை திறந்த விட செய்திருக்கலாம்.

இந்தியா கூட்டணி கூட்டம் பாட்னாவில் கூடியபோது, டில்லியில் ஆம் ஆத்மி கட்சி, தன் மாநில மக்கள் நலனில் அக்கறை கொண்டு, எவ்வாறு நிபந்தனை அடிப்படையில் கூட்டணியில் அங்கம் வகிக்க சம்மதித்ததோ, இதேபோன்று, காவிரியில் காங்கிரஸ் அரசு தண்ணீரை திறந்து விட்டால்தான் கூட்டணியில் அங்கம் வகிப்போம் என்ற நிபந்தனையை விதித்திருக்கலாம்.

காவிரி டெல்டா பகுதி நெற்பயிர்கள் தண்ணீரின்றி கருகி, நிலங்கள் பாலைவனமான நிலையில், இந்தியா கூட்டணியின் சார்பில் பெங்களூரில்கூட்டிய கூட்டத்துக்கு வரமாட்டேன்.

தி. மு. க. அரசு உரிய அழுத்தம் கொடுக்க வேண்டும். விவசாயிகள் மீது இனிமேலாவது அக்கறை கொண்டு, காவிரி நீர்ப் பிரச்னையில் தமிழகத்தில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளின் கூட்டத்தை உடனடியாகக் கூட்டி, தமிழக மக்களின் உரிமையைக் காத்திட, காவிரி நீரை விரைந்து பெற்றிட ஓர் உறுதியான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்று இந்த தி. மு. க. அரசை வலியுறுத்துகிறேன் - என்றார்.

# காணாமல் ஆக்கப்பட்ட சிறார்க்கு நீதி கோரி யாழிலும் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஒக். 02

**சர்வதேச சிறுவர் தினமான நேற்று இறுதிப் போரின் போது காணாமல் ஆக்கப்பட்ட சிறுவர்களுக்கு நீதி கோரி நேற்று யாழ்ப்பாணத்தில் கவனவீர்ப்பு போராட்டம் நடைபெற்றது.**



நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்கு அண்மையாக நேற்று காலை இந்தப் போராட்டம் நடைபெற்றது.

வடக்கு, கிழக்கு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர் சங்கத்தின் யாழ். மாவட்டத்தினரின் ஏற்பாட்டில் நடந்த இந்தப் போராட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்ட சிறுவர்களை மீட்டுத் தர வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர்.

அத்துடன், காணாமல் ஆக்கப்பட்ட, படையினரிடம் கையளிக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சிறுவர்களை சர்வதேசம் மீட்டுத் தர வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கூறினர். அத்துடன், எமது பிள்ளைகளை காணவில்லை என கடந்த பத்து வருடத்திற்கு மேலாக நாங்கள் போராடி வருகிறோம். ஆனால் இதுவரையில் இலங்கை அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இனியும் தாமதிக்காது சர்வதேசம் காத்திரமான உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென மீண்டும் கோரிக்கை விடுக்கின்றோம் - என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

(ஐ)

# 8 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாயம்!

கொழும்பு, ஒக். 02

மழையுடனான காலநிலை காரணமாக 8 மாவட்டங்களில் உள்ள 30 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் நேற்று தெரிவித்தது.

இதன்படி, இரத்தினபுரி மாவட்டத்தில் இம்புல்பே, கொலொன்ன, அயகம, பெல்மடுல்ல, குருவிட்ட, கல்வானை, எஹெலியகொடை, கிரியெல்ல, இரத்தினபுரி, எலபட மற்றும் நிவித்திகலை, மாத்தறை மாவட்டத்தில் முலட்டியன, அதுரலிய, கொட்டபொலை மற்றும் பிடபெத்தர, ருவன்வெல்ல, தெஹியோவிட்ட, கேகாலை, பஸ்பாகே கோராலய,

களுத்துறை மாவட்டத்தின் பரல்லாவிட்ட, மத்துகம, புலத்சிங்கள அகலவத்தை, புகத்சிங்க மற்றும் இங்கிரிய, அம்பாந்தோட்டை மாவட்டத்தின் கரஸ்முல்ல மற்றும் காலி மாவட்டத்தின் எல்பிட்டிய மற்றும் நெலுவ மற்றும் மாத்தளை மாவட்டத்தின் பிராந்திய செயலர் பிரிவுகளுக்கு இந்த மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# நீதிபதி சரவணராஜாவை பாதுகாப்பதற்கு நீதியமைச்சர், சபாநாயகர் தவறிவிட்டனர்!

## சீ. வீ. கே. சிவஞானம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஒக். 02

சட்டத்தின் முன் யாவரும் சமம் என்ற அடிப்படைக் கோட்பாட்டின்படி செயல்பட்ட நீதிவானைப் பாதுகாக்க வேண்டிய நீதியமைச்சரும் சபாநாயகரும் பொருத்தமான நடவடிக்கை எதனையும் எடுக்கவுமில்லை - என்று வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் சாடியுள்ளார்.

நீதிபதி சரவணராஜா விவகாரம் குறித்து நேற்று அவர் ஊடகங்களுக்கு விடுத்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதில், முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி. சரவனராஜா தமது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதை உணர்ந்த காரணத்தாலேயே தமது மதிப்பு வாய்ந்த நீதிபதி பதவியை இராஜிநாமா செய்து விட்டு நாட்டை விட்டு வெளியேறியுள்ளார் எனக் கூறப்பட்டுள்ளது. நிலைமை இவ்வாறு இருக்கையில், நாட்டின் நீதி அமைச்சரோ அவர் தாமாக முன்வந்து சட்டமா அதிபரை சந்தித்தார், இரண்டு இராஜதந்திரிகளை சந்தித்தார், தமது வாகனத்தை விற்றார் என்று கூறுகிறார்.

இவர் ஓர் அனுபவம் வாய்ந்த சிரேட்ட சட்டத்தரணி. பதவியை இராஜிநாமா செய்த பின் ஒருவர் எதையும் விற்கலாம் - யாரையும் சந்திக்கலாம் என்பதை தெரியாதவர் அல்ல. நீதிவான் குருந்தூர்மலை பகுதியில் நீதிமன்ற கட்டளைக்கு மாறாக விகாரை கட்டுமானம் இடம் பெறுவது பற்றிய தள ஆய்வுக்கவாகவே நீதிமன்ற அலுவலர்கள் சகிதம் அங்கு சென்றுள்ளார்.

ஆய்வுப்பணி நடைபெற்றுக் கொண்டு இருக்கும்போதே பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர எதுவித அறிவித்தலோ, அழைப்போ, அனுமதியோ இல்லாமல் தமது பரிவாரங்களுடன் அங்கு பிரசன்னமாகியது மட்டுமின்றி நீதிவானின் கடமைக்கு இடையூறு செய்யும் வகையில் அவருடன் வாதிட முயன்றிருக்கிறார். இது நீதிமன்றத்தையும் நீதிவானையும் அவமதிக்கும் செயலாகும்.

அதனை நீதிவான் நிராகரித்த காரணத்தால் சரத் வீரசேகர ஆத்திரப்பட்ட நிலையிலேயே காணப்பட்டார். நீதிமன்ற செயல்பாடுகளில் வேற்று எவரும் தலையீடு செய்வது நீதிமன்ற நடைமுறைகளுக்கு மாறானது என்று தெரிந்து கொண்டே சரத் வீரசேகர இவ்வாறு அடாவடித்தனமாக செயல்பட்டுள்ளார். இதன் போதே தமது ஆத்திரத்தை இவர் அங்கு வெளிப்படுத்தியது ஊடகங்கள் வெளிப்படுத்திய செய்தி.

பாராளுமன்ற அனுபவம் உள்ளவரும், பாதுகாப்புத் துறை சார் குழுவின் தலைவராக உள்ளவருமான சரத் வீரசேகராவின் அன்றைய செயல்பாடுகளே சரவணரராஜாவுக்கு தீவிர உயிர் அச்சுறுத்தலை தோற்றுவிப்பது இயல்பானதே. இவருடன் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பிலவும் இணைந்து இனவாதத்தைக் காட்டியிருந்தார்.

இதற்கு மேலாக, பாராளுமன்ற சிறப்புரிமையை கவசமாகப் பாவித்து சரத் வீரசேகர பாராளுமன்றத்தில் சரவணராஜாவுக்கு எதிராக ஆற்றிய உரை அவருக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்படுவது உறுதிப்படுத்தியிருக்கக்கூடியது என்பதை யாரும் மறுக்கமுடியாது.

சட்டத்தின் முன் யாவரும் சமம் என்ற அடிப்படைக் கோட்பாட்டின்படி செயல்பட்ட நீதிவானைப் பாதுகாக்க வேண்டிய நீதியமைச்சரும் சபாநாயகரும் பொருத்தமான நடவடிக்கை எதனையும் எடுக்கவுமில்லை. சபாநாயகர் ஒப்புக்கு ஓர் ஆலோசனையைத் தெரிவித்து விடயத்தை முடித்துக் கொண்டார்.

நீதிமன்ற உத்தரவை மீறி பௌத்த வழிபாட்டு நிலையத்தை குருந்தூர்மலை பிக்கு மேற்கொண்ட நிர்மாண வேலைகள், அதற்கு ஆதரவு வழங்கும் வகையில் புத்தசாசன அமைச்சரின் வருகை, அவரது தனிப்பட்ட குடும்ப விடயங்களை விமர்சனம் செய்தமை எல்லாமே சரவணராஜாவுக்கு உயிர் அச்சுறுத்தலை கொடுத்திருக்கும் என்பதை உணராதது மட்டுமன்றி, இவற்றை எல்லாம் மௌனமாக பார்த்துக் கொண்டிருந்ததன் மூலம் இந்த நாட்டில் நீதி நிர்வாகம் இனவாதத்துக்குள்ளும் பௌத்த மதவாதத்துக்குள்ளும் சிக்கியுள்ளமை வெளிப்படை - ஒரு நீதிவானை அந்தப் பதவி சார்ந்து பார்க்காமல் தமிழன் என்று பார்த்து விமர்ச்சித்தையும் இரசித்துக் கொண்டது முழு அரசாங்கமும். வெட்கித் தலைகுனிய வேண்டிய விடயம் இது. இந்த இலட்சணத்தில் தான் உள்ளகப் பொறிமுறையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் கிடைக்கும் என்றும் சர்வதேச விசாரணை தேவையற்றது என்றும் சிங்கள ஏகாதியத்தியம் பேசிக்கொண்டிருக்கிறது.

எனவே, சரவணராஜாவுக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் செயற்பட்ட சரத் வீரசேகர போன்றோரின் செயல்பாடுகள் பற்றி பூரணமாக விசாரணை நடத்தப்பட்டு அவருக்கு நீதி வழங்கப்படல் வேண்டும் என்றுள்ளது.

(ஐ)





# நாகர்கோவில் நாகதம்பிரான் ஆலய கப்பல் திருவிழா சிறப்புற நடந்தது!

வடமராட்சி, ஒக். 02

வரலாற்று சிறப்புமிக்க வடமராட்சி கிழக்கு - நாகர்கோவில் நாகதம்பிரான் ஆலயத்தின் பிரபல திருவிழாவான கப்பல் திருவிழா நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு நடைபெற்றது.

இந்தத் திருவிழாவின்போது தென்னிந்திய கர்நாடக சங்கீத பாடகி திருமதி நித்தியசிறீ மகாதேவன் இசைக் கச்சேரி நடத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

(ஐ-02)

# ஓ. எல்., ஏ. எல். பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு தொழில்பயிற்சி!

## அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு, ஒக். 02

சாதாரண தர, உயர்தர பரீட்சைகள் நிறைவடைந்தவுடன் அந்த மாணவர்களுக்கான தொழிற்பயிற்சி பாட நெறிகளை விரைவில் ஆரம்பிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கல்வி பொதுத்தராதர சாதாரண தர மற்றும் உயர்தர பரீட்சைகள் நிறைவு செய்த மாணவர்களுக்கே தொழிற்பயிற்சி நெறிகளை உடனடியாக ஆரம்பிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கிந்தோட்டை பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

# குளவி கொட்டி ஒருவர் மரணம்

நுவரெலியா, ஒக். 02

பசறை - லுணுகலை ஹொப்டன் - யப்பாம தனியார் தோட்டத்தில் தொழிலுக்கு சென்ற நபர் ஒருவர் குளவிக்கொட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குளவிக்கொட்டுக்கு இலக்கான குறித்த நபர் சிகிச்சைகளுக்காக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

குறித்த நபர் லுணுகலை - ஹொப்டன் பகுதியைச் சேர்ந்த 53 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(ஐ)

ஈழநாடு



# 3,000 சிறார்கள் கிளிநொச்சியில் போசாக்கு இன்மையால் பாதிப்பு

கிளிநொச்சி, ஒக். 02

**கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட சிறுவர்கள் போசாக்கு இன்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.**

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் மூவாயிரத்துக்கும் அதிகளவான சிறுவர்கள் போசாக்கு இன்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

பொருட்களின் விலையேற்றம், தொழில் வாய்ப்பின்மை, வறுமை, உணவு பாதுகாப்பின்மை உள்ளிட்ட காரணங்களால் குறித்த சிறுவர்கள் போசாக்கு ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளனர். அதாவது, 568 இற்கும் மேற்பட்ட ஐந்து வயதுக்கு உட்பட்ட சிறுவர்களும் 2, 765 க்கு மேற்பட்ட 16 வயதுக்குட்பட்ட சிறுவர்களும் இவ்வாறு போசாக்கு குறைபாடுகளால் பாதிக்கப்பட்டுள்ளனர்

கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் ஆயிரத்து 288 சிறுவர்களும் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் 884 சிறுவர்களும் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் 768 சிறுவர்களும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் 393 சிறுவர்களும் போசக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்ட செயலகத்தின் தகவல்கள் மூலம் அறிய முடிந்துள்ளது. (ஐ)

# ஐஸ் போதைப் பொருளுடன் மன்னாரில் ஒருவர் கைது!

மன்னார், ஒக். 02

மன்னார் - முருங்கன் பகுதியில் ஐஸ் போதைப்பொருளுடன் நேற்று அதிகாலை ஒருவர் கைது செய்யப்பட்டார்.

மன்னார் இராணுவ புலனாய்வு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கு அமைவாக நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கையிலேயே இந்த ஐஸ் போதைப் பொருள் கடத்தல் முறியடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

மன்னார் பொலிஸ் குற்ற புலனாய்வு பிரிவினருடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 25 இலட்சம் ரூபாய் பெறுமதியான 178.75 கிராம் நிறை கொண்ட ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடத்தலில் ஈடுபட்ட முக்கிய வியாபாரி அங்கிருந்து தப்பியுள்ளார். எனினும், போதைப் பொருளை கடத்தி வந்த 37 வயதான நபர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக முருங்கன் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)



# காணாமல் ஆக்கப்பட்ட சிறுவர்களுக்கு நீதி கோரி கிளிநொச்சியில் போராட்டம்!

கிளிநொச்சி, ஒக். 02

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் போரின் இறுதிக் கட்டத்தில் சரணடைந்த சிறுவர்களுக்கு நீதி கோரி கிளிநொச்சியில் நேற்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சியில் கடந்த 2 ஆயிரத்து 474 நாட்களாக கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சர்வதேச சிறுவர் தினமான நேற்று இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

போரின் இறுதி கட்டத்தில் சரணடைந்த சிறுவர்களுக்கு நீதி கோரியும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரியும் இந்தப் போராட்டம் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் பணிமனையின் முன்பாக நடைபெற்றது. (ஐ)

# முல்லைத்தீவு நீதிபதிக்கு அழுத்தங்கள் இல்லை என்று எவரும் சொல்லமுடியாது!

## முல்லைத்தீவில் சுமந்திரன் எம். பி.

முல்லைத்தீவு, ஒக். 02

நீதிபதிக்கு அழுத்தங்கள் இல்லை என்று எவரும் சொல்ல முடியாது. இந்த மோசமான நீதி பிறழ்வு ஏற்பட்டுள்ள இந்த தருணத்தில் நாங்கள் உரத்து சொல்லவேண்டிய கடப்பாடு இருக்கின்றது. தொடர்ச்சியாக இந்த விடயத்தை உலகத்தில் பல நாடுகள் திரும்பி பார்க்கும் வண்ணமாக பல நடவடிக்கைகளை தொடர்ந்து எடுக்க இருக்கின்றோம் - என்று பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அவர்கள் தெரிவித்துள்ளார்

முள்ளியவளையில் மக்களுக்கான குடிதண்ணீர் விநியோக திட்ட நிகழ்வில் நேற்று பங்கேற்றியபோதே சுமந்திரன் எம். பி. மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், தனது கடமையை செய்தமைக்காக அச்சுறுத்தப்பட்ட பிறகு அவர் உயிருக்கு ஆபத்து என்றும் தனக்கு பெரிய அழுத்தம் பிரயோகிக்கப்பட்டதாகவும் சொல்லி முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி நாட்டை விட்டு வெளியேறியுள்ள நிலையில் நான் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு வந்துள்ளேன்.

நீதித்துறை எந்தவிதமாக பாதிக்கப்பட்டுள்ளது என்பதன் வெளிப்பாடு முல்லைத்தீவு மாவட்டத்தில்தான் பெரிதாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் நீதித்துறை மோசமாக பாதிக்கப்படுகின்றது. நீதித்துறையின் சுயாதீனம் கேள்விக்குட்படுத்தப்பட்டுள்ளது என்பது எங்கள் நாட்டின் சரித்திரத்துடன் ஒன்றிய விடயம். புதிய விடயமல்ல ஒரு சில நீதிபதிகள் அழுத்தங்கள் காரணமாக பதவிகளை விட்டு நாட்டைவிட்டு வெளியேறிய தருணங்களும் கடந்த காலங்களில் நிகழ்ந்துள்ளன.

இந்த தடவைதான் முதல் தடவையாக அப்படியாக வெளியேறுகின்ற ஒருவர் வெளிப்படையாக அதனை சொல்லி அறிவித்துவிட்டு பதவிகளை இராஜிநாமா செய்து நாட்டை விட்டு போயுள்ளார்.

நீதித்துறை சுதந்திரமாக இல்லை என்பது எல்லாருக்கும் தெரிந்ததை இன்று உலகளாவிய ரீதியில் மறுக்கமுடியாத ஓர் அறிவிப்பாக இந்த செயற்பாடு அமைகின்றது.

அவருக்கு அழுத்தம் பிரயோகிக்கப்பட்டது என்பது எவரும் மறுக்கமுடியாத விடயம். அவருக்கு கடந்த மாதங்களில் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டபோது இந்த இடத்திலும் வேறு இடத்திலும் போராட்டங்கள் நடந்தன. பாராளுமன்றத்தில் பாராளுமன்ற நிலையியல் கட்டளையை மீறி சரத் வீரசேகர உரையாற்றி இருக்கின்றார் என்று நான் ஒழுங்கு பிரச்னையை எழுப்பி இருந்தேன். பாராளுமன்ற ஒழுங்குகள் பற்றிய குழுவுக்கு அது பாராப்படுத்தப்பட்டுள்ளது.

நீதிபதிக்கு அழுத்தங்கள் இல்லை என்று எவரும் சொல்ல முடியாது. இந்த மோசமான நீதி பிறழ்வு ஏற்பட்டுள்ள இந்த தருணத்தில் நாங்கள் உரத்து சொல்லவேண்டிய கடப்பாடு இருக்கின்றது. தொடர்ச்சியாக இந்த விடயத்தை உலகத்தில் பல நாடுகள் திரும்பி பார்க்கும் வண்ணமாக பல நடவடிக்கைகளை தொடர்ந்து எடுக்க இருக்கின்றோம்- என்றும் அவர் கூறினார். (ஐ)

# வெளிநாட்டு பத்திரிகையாளருக்கு இரணைதீவுக்கு செல்வதற்கு தடை

கிளிநொச்சி, ஒக். 02

இலங்கைக்கு வந்துள்ள பத்திரிகையாளர் ஒருவர் தான் இரணைதீவுக்கு செல்வதை கடற்படையினர் தடுத்து வருகின்றனர் என எக்ஸ் (டுவிற்றர்) தளத்தில் பதிவிட்டுள்ளார்

எல். கே. ஸ்காலியர்ஸ் என்ற அந்த பத்திரிகையாளர் தனது வலைதளத்தில் தெரிவித்தவை வருமாறு,

இலங்கைக்கு நான் ஊடக பணிக்காக வந்துள்ளேன். இரணைதீவுக்கு ஊடக படப்பிடிப்பாளராக நான் செல்வதை கடற்படையினரும், முழங்காவிலில் நிலைகொண்டுள்ள படைதரப்பினரும் தடை செய்கின்றனர்.

நான் அந்த தீவுக்கு செல்வதற்கான அனுமதியை பெற்றுள்ளேன். எனினும், என்னை அங்கு செல்ல அனுமதிக்கவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



# நீதிபதி சரவணராஜா விவகாரம்: கிளிநொச்சியில் கவனவீர்ப்பு!

கிளிநொச்சி, ஒக். 02

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தின் நீதிபதி ரி. சரவணராஜாவுக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் மற்றும் அழுத்தங்களை கண்டித்து நேற்று போராட்டம் நடைபெற்றது.

கிளிநொச்சி பேருந்து நிலையத்துக்கு முன்பாக நடந்த கவனவீர்ப்பு போராட்டத்தில் கையொப்பங்களும் பெறப்பட்டன.

தமிழ்த் தேசிய இளைஞர் பேரவையினர் இந்த போராட்டத்தை முன்னெடுத்தனர். (ஐ)

# மன்னார் மீனவரிடம் திருட்டு; புத்தளத்தில் ஒருவர் கைது!

மன்னார், ஒக். 02

மன்னார் - பள்ளிமுனை மீனவர் ஒருவரின் மீன் வாடியில் இருந்து திருடிச் செல்லப்பட்ட சுமார் 9 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஒரு தொகுதி மீன்பிடி உபகரணங்களை மன்னார் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் சனிக்கிழமை கற்பிட்டியில் வைத்து மீட்டனர். அத்துடன், சந்தேக நபரையும் கைது செய்துள்ளனர்.

மன்னார் பள்ளிமுனையைச் சேர்ந்த மீனவர் ஒருவரின் மீன்பிடி வாடி பள்ளிமுனை கடற்கரை பகுதியில் அமைந்துள்ளது. குறித்த மீனவரின் வாடியில் கற்பிட்டியைச் சேர்ந்த குறித்த நபர் தங்கி இருந்து மீன்பிடியில் ஈடுபட்டு வந்துள்ளார்.

சில தினங்களுக்கு முன் குறித்த மீன் வாடியில் வைக்கப்பட்டிருந்த படகுகளின் 2 வெளி இணைப்பு இயந்திரம்(எஞ்சின்) உள்ளடங்களாக அட்டை பிடிக்க பயன்படுத்தும் உபகரணங்கள் உள்ளடங்களாக சுமார் 9 இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்களை திருடிச் சென்றுள்ளார்.

குறித்த வாடியின் உரிமையாளர் உடனடியாக மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். இந் நிலையில் மன்னார் தலைமையக பொலிஸ் நிலைய பதில் நிலைய பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ராமநாயக்கவின் பணிப்புரைக்கு அமைவாக மன்னார் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ரணுக்க விக்கிரமசிங்க தலைமையிலான குழுவினர் இணைந்து தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதன்போது பொருட்களை திருடிய நபர் கற்பிட்டி பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார். அத்துடன், அவர் திருடி விற்பனை செய்த பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட நபர் மன்னார் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டுள்ளதோடு,மீட்கப்பட்ட பொருட்களும் மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது. மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# வருமான வீழ்ச்சியால் மக்கள் விரக்தி; சர்வதேச நாணய நிதியம் அறிக்கை!

கொழும்பு, ஒக். 02

**வருமானத்தில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியால் நாட்டு மக்கள் மத்தியில் கடுமையான சமூக அழுத்தங்கள் ஏற்பட்டுள்ளன என்று சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.**

சர்வதேச நாணய நிதியத்தால் வெளியிடப்பட்டுள்ள "2023 - செப்ரெம்பர் - பொது நிர்வாக பகுப்பாய்வு மதிப்பீட்டு அறிக்கை"யில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பணவீக்கத்தை மட்டுப்படுத்துதல், நாணய மாற்று விகிதங்களை ஸ்திரப்படுத்துதல், இலங்கை மத்திய வங்கியின் இருப்புகளை மீள கட்டியெழுப்புதல் ஆகியவற்றுடன் பொருளாதார ஸ்திரப்படுத்தலில் தற்காலிக முன்னேற்றங்கள் இருந்த போதிலும், இந்த நிலை உருவாகியுள்ளதாக சர்வதேச நாணய நிதியத்தின் புதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எரிசக்தித்துறையில் வரித் திருத்தங்கள், செலவை ஈடு செய்வதற்காக முன்வைக்கப்பட்ட விலை நிர்ணயம், நிலுவைத் தொகை நெருக்கடியைத் தீர்க்க அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் என்பன வாழ்க்கைச் செலவை உயர்த்தியுள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்தியாவசியப்பொருட்களின் தொடர்ச்சியான தட்டுப்பாடு, போராட்டக்காரர்களுக்கு எதிரான கடுமையான நடவடிக்கைகள் மற்றும் உள்ளூராட்சித் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டமை என்பன பொது மக்களின் அதிருப்திக்கு வழி வகுத்துள்ளதாகவும் சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊழலைக் குறைப்பதில் தெளிவான முன்னேற்றம் இல்லாமையும் பொதுமக்களிடையே அதிருப்தி ஏற்பட முக்கிய காரணியென சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

கடந்த கால முறைகேடுகளுக்கு காரணமான அதிகாரிகள் அதற்குரிய தண்டனையை அனுபவிக்காமல், தத்தமது பதவிகளில் தொடர்ந்தும் நீடிக்கின்றமையும் பொதுமக்கள் கவனம் செலுத்தியுள்ள விடயமாக அமைந்துள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தனது அறிக்கையில் கூறியுள்ளது.

இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு உள்ளிட்ட பலவீனமான பொறுப்புக்கூறல் நிறுவனங்களால் ஊழல் அபாயங்கள் உக்கிரமடைந்துள்ளதாகவும் இதனால் இந்த நிறுவனங்களுக்கு தங்களது பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றும் அதிகாரமோ, தகுதியோ இல்லை எனவும் சர்வதேச நாணய நிதியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

தவறான நடத்தையைக் கொண்ட அதிகாரிகளை தண்டிக்காததால், பொது நிர்வாகத் துறை மீதான நம்பிக்கை குறைமதிப்பிற்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அரச கொள்முதல் நடவடிக்கைகளில் ஊழல் இடம்பெறும் அபாயம் காணப்படுகின்றமை, கொள்முதல் செயற்பாடுகளுக்கான விநியோகஸ்தர்களை தெரிவு செய்வதில் அதிக அரசியல் தலையீடுகள் காணப்படுகின்றமை என்பன பொதுமக்களின் விரக்திக்கான காரணங்களாக அமைந்துள்ளதாக சர்வதேச நாணய நிதியத்தின் புதிய அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ)

# சிவனொளிபாதமலைக்கு செல்வதற்கு தடை விதிப்பு

நுவரெலியா, ஒக். 02

பருவகாலம் இல்லாத காலப்பகுதியில் அனுமதியின்றி சிவனொளிபாதமலைக்கு செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட அறிவித்துள்ளார்.

நுவரெலியா மாவட்ட செயலகத்தில் சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

பருவகாலம் இல்லாத காலப்பகுதியில் அனுமதியின்றி சிவனொளிபாத மலைக்கு சென்று வழிபடலாம் என அண்மைய நாட்களில் வெளியான செய்திகள் உண்மையல்ல.

2022 - 2023ஆம் ஆண்டு சிவனொளிபாத மலை பருவகாலம் நிறைவடைந்துள்ள நிலையில், சப்ரகமுவ மாகாண பிரதம சங்கநாயக பெங்கமுவே தம்மதின்னவின் பணிப்புரைக்கமைய, அனுமதியின்றி ஹற்றன் வீதி மற்றும் இரத்தினபுரி வீதி ஊடாகவும் சிவனொளி பாத மலைக்கு செல்வதற்கு முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

சிவனொளிபாத மலைக்கு பருவகாலம் இல்லாத காலப்பகுதியில் வரும்போது உரிய நிறுவனங்களின் அனுமதியை பெற்று, நல்லதண்ணி மற்றும் இரத்தினபுரி பொலிஸ் நிலையங்களுக்கு அறிவிக்க வேண்டும்.

சிவனொளிபாதமலை பகுதியில் இடையிடையே பலத்த மழை பெய்து வருவதாலும், அங்கு செல்லும் படிகளில் பாரிய நீரோடை ஓடுவதாலும் சிவனொளிபாத மலைக்கு செல்வது ஆபத்தானது என எச்சரித்துள்ளார். (ஐ)

# தொழிற்சாலை விபத்தில் இந்திய பிரஜை மரணம்!

கொழும்பு, ஒக். 02

வெலிபென்ன பகுதியில் அமைந்துள்ள தொழிற்சாலை ஒன்றில் பணிபுரிந்த இந்திய பிரஜையொருவர் தீயில் கருகி உயிரிழந்தார்.

குழாய் ஒன்றில் ஏற்பட்ட வெடிப்பினால் அவர் இந்த அனர்த்தத்தை எதிர்நோக்கியிருக்கலாம் என சந்தேகிப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

41 வயதான ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார். விபத்தில் காயமடைந்த மேலும் இரு இந்திய பிரஜைகள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# இ. போ. ச. நடத்துநரை தாக்கிய ஒருவர் கைது

கொழும்பு, ஒக். 02

இ. போ. ச. பஸ் நடத்துநரை தாக்கிய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மற்றொருவர் தொடர்ந்தும் தலைமறைவாகியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், சம்பவ இடத்துக்குச் சென்ற இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் சந்தேக நபர்களை கைது செய்ய முற்பட்டபோது சந்தேக நபர்கள் அங்கிருந்து தப்பி சென்றுள்ளனர்.

பஸ் அநுராதபுரத்திலிருந்து கொழும்பு நோக்கி பயணிகளை ஏற்றிக்கொண்டு சென்றபோது கெக்கிராவை பொது மைதானத்துக்கு அருகில் வந்த இருவர், பஸ்ஸை மறித்து நடத்துநரை தாக்கி, அவரிடமிருந்த பயணச்சீட்டு இயந்திரத்தை சேதப்படுத்திய பின்னர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

இந்நிலையில், சந்தேக நபர் ஒருவர் மறுநாள் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# மழையால் ஏற்பட்ட அனர்த்தங்களால் 5 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்!

கொழும்பு, ஒக். 02

நாட்டில் பெய்து வரும் கடும் மழையால் ஏற்பட்ட அனர்த்தங்களால் மூன்று மாகாணங்களில் ஆயிரத்து 275 குடும்பங்களை சேர்ந்த 5 ஆயிரத்து 51 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் நேற்று ஞாயிற்றுக்கிழமை தெரிவித்துள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தின் 14 பிரதேச செயலர் பிரிவுகளில் 199 குடும்பங்களைச் சேர்ந்த 770 பேரும், களுத்துறை மாவட்டத்தில் 12 பிரதேச செயலகப் பிரிவுகளில் 272 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 34 பேரும், மாத்தறை மாவட்டத்தில் 16 பிரதேச செயலகப் பிரிவுகளில் ஆயிரத்து 275 குடும்பங்களில் 3 ஆயிரத்து 247 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் நிலையம் தெரிவித்துள்ளது.

அத்துடன், கடும் மழை, வெள்ளம், மரம் முறிவு மற்றும் மரம் வெட்டுதல் போன்ற சம்பவங்களினால் மக்கள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ஐ)

# நிகழ்நிலைக் காப்பு உத்தேச சட்டம் பேச்சு, கருத்து சுதந்திரத்தை பறிக்கும்!

## சுதந்திர ஊடக இயக்கம் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 02

வர்த்தமானியாக வெளியிடப்பட்டுள்ள நிகழ்நிலைக் காப்பு தொடர்பான புதிய சட்டமூல வரைவு பேச்சு மற்றும் கருத்து சுதந்திரத்தை பறிக்கவும் - மாற்றுக்கருத்து கொண்டவர்களை ஒடுக்கவும் பயன்படும் அபாயம் காணப்படுகிறது என்று சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது. அத்துடன், இந்த உத்தேச சட்டமூலம் அமுல்படுத்தப்படுமாயின் சமூகத்திற்கு கேடுவிளைவிக்கும் வகையில் பயன்படுத்துவதற்கான வாய்ப்பு மிகவும் அதிகம் என சுதந்திர ஊடக இயக்கம் தெரிவித்துள்ளது

ஒன்லைன் தளங்களில் பயனர்களை அல்லது பிறரை அச்சுறுத்தலுக்கு உட்படுத்தும், புரளி மற்றும் பொய்செய்தி பரவல் (பிற பிரிவுகள் உட்பட) வெறுக்கத்தக்க பேச்சு போன்றவற்றை கட்டுப்படுத்த ஒரு பொறிமுறை காணப்பட வேண்டிய அவசியம். அதேவேளை சமூக தரநிலை மற்றும் பல துறைசார் பங்கேற்பின்றி டிஜிற்றல் ஊடக கல்வியறிவை மேம்படுத்தல், நெறிமுறை பயன்பாட்டை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளை கருத்தில் கொள்ளாமல் சுயாதீனத்துவம் தொடர்பான சந்தேகத்துக்கு இடமான ஆணைக்குழு நியமிப்பதன் ஊடாக சட்ட ஏற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் எதிராளிகளை ஒடுக்கவும் அதிகாரத்தில் உள்ள அரசாங்கத்துக்கு எதிராக இணையத் தளங்களில் குரல் கொடுப்பதை தடுக்கவும் இடமளிக்கும் புதிய பாதையொன்றை அரசாங்கம் தேர்வு செய்துள்ளது.

அவ்வாறான சட்டமூலம் நிறைவேற்றப்படுமாயின் தற்போதைய அரசாங்கமோ அல்லது அதிகாரத்துக்கு வரும் எதிர்கால அரசாங்கமோ அதனைத் தவறாகப் பயன்படுத்தாது என உறுதியளிக்க முடியாது. உத்தேச சட்ட விதிகளின் படி ஜனாதிபதியால் ஆணைக்குழு நியமிக்கப்படுமாயின் அதனைச் சுயாதீன ஆணைக்குழு என அழைப்பது நியாயமானதா எனச் சுதந்திர ஊடக இயக்கம் கேள்வி எழுப்புகின்றது.

மேலும் இந்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சில விடயங்களுக்குப் பரந்த விளக்கங்கள் கொடுக்கப்படலாம் என்பதால், ஏதாவது ஒரு விடயம் தொடர்பில் அது தவறான விடயம் என வரைவிலக்கணம் அளித்து குறித்த மாற்றுக் கருத்தை முடக்க ஆணைக்குழுவிற்கு அதிகாரம் காணப்படும் காரணத்தால் சம்பந்தப்பட்ட தரப்பினரின் கருத்துச்சுதந்திரம் சவாலுக்கு உட்படுத்தப்படும்.

இந்த சட்டமூலத்தை திரும்பப் பெறுவதற்கு அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும். கருத்துகளை நசுக்குவதற்குப் பதிலாக நாகரிகமான முறையில் பதிலளிக்கும் மற்றும் பேச்சு சுதந்திரத்தை மதிக்கும் சமூகத்தை கட்டியெழுப்புவதில் நம்பிக்கை கொண்ட அனைத்து தரப்பினரும் புரிந்துணர்வுடன் செயல்பட வேண்டும் - என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. (ஐ)

# குருநாகலில் பிக்கு குத்திக் கொலை!

கொழும்பு, ஒக். 02

குருநாகல் - பொத்துஹெர லிஹினிகிரிய பிரதேச விகாரை ஒன்றில் வசித்து வந்த தேரர் ஒருவர் 29ஆம் திகதி இரவு கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார். பொத்துஹெர பரபாவில பிரதேசத்தில் இவருக்குச் சொந்தமான வீட்டிலேயே இந்தக் கொலை இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்த பிக்கு இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்ற பொறியியலாளர் என தெரிவிக்கப்படுகிறது.

64 வயதான இவர் கடந்த மார்ச் மாதம் துறவு வாழ்க்கையில் நுழைந்தார் என்றும் இவர் திருமணமானவர் எனவும் கூறப்படுகின்றது. (ஐ)

# தம்பலகாமம் மருத்துவமனையில் தீ விபத்தால் பெரும் சொத்து அழிவு





**திருகோணமலை, ஒக். 02**

**திருகோணமலை - தம்பலகாமம் பிரதேச மருத்துவமனையில் நேற்று காலை ஏற்பட்ட தீ பரவலால் பெருமளவு சொத்து அழிவுகள் ஏற்பட்டுள்ளன என்று தெரிவிக்கப் பட்டது.**

இந்த தீ விபத்து மின் ஒழுக்கு காரணமாக இடம்பெற்றிருக்கலாம் என ஆரம்பகட்ட விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது.

தீயணைப்பு பிரிவு மற்றும் முள்ளிப்பொத்தானை திஸ்ஸபுர இராணுவத்தினர், பொலிஸார் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். எனினும், பல வகையான மருந்துகள், ஆய்வுகூட உபகரணங்கள் என பல இலட்சம் ரூபாய் மதிப்பான பொருட்கள் தீயில் எரிந்து நாசமாகின என்று மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

சம்பவ இடத்துக்கு தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ. சிறீபதி மற்றும் மாகாண சுகாதார சேவைகள் அமைச்சின் செயலாளர் ஜே. ஜே. முரளிதரன் உள்ளிட்டோர் சென்று தீ விபத்து தொடர்பில் ஆராய்ந்தனர்.

இச்சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை தம்பலகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)



# ஆயுள்வேத வைத்திய முகாம் சாய்ந்தமருதில் நடைபெற்றது

சாய்ந்தமருது, ஒக். 02

சாய்ந்தமருது கிராமிய ஆயுள்வேத வைத்தியசாலையால் ஏற்பாடு செய்யப்பட்ட இலவச ஆயுள்வேத வைத்திய முகாம் சாய்ந்தமருது கிராமிய ஆயுள்வேத வைத்தியசாலையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்த ஆயுள்வேத வைத்திய முகாமில் இந்தியாவின் கேரளாவிலிருந்து வருகை தந்த பிரபல வைத்தியர் ஸ்டாலின் சிகிச்சை வழங்கினார்.

இதில், சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஏ.எல். எம். றிபாஸ், ஆயுள்வேதப் பணிப்பாளர் எனப் பலரும் கலந்து கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில், பொதுமக்களின் பல்வேறுபட்ட நோய்களுக்கு ஆலோசனையுடன் கூடிய மருத்துவ சிகிச்சை அளிக்கப் பட்டது. (ஐ)



# காரைதீவு பிரதேசத்தில் நாய்களுக்கு தடுப்பூசி!

காரைதீவு, ஒக். 02

உலக நீர் வெறுப்பு நோய் தினத்தையொட்டி கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளிலும்

நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது.

பொதுச் சுகாதார பரிசோதகர்களின் ஆதரவுடன் நடைபெறும் இந்தத் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காரைதீவு சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட பிரதேசங்களில் நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டது. (ஐ)

# போதைப் பொருட்களுக்கு அடிமையான 15 பேர் புனர்வாழ்வு நிலையத்தில் சேர்ப்பு

## மட்டு. தலைமையக பொலிஸ் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஒக். 02

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவில் கடந்த 9 மாதங்களில் போதைபொருளுக்கு அடிமையான15 பேரை நீதிமன்ற கட்டளைக்கு அமைய கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் சேர்த்ததாக பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

புன்னைச்சோலை பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயது இளைஞர் போதைப்பொருளுக்கு அடிமையான நிலையில் பெற்றோரிடம் பணம் கேட்டு வீட்டிலுள்ள சமையல் பாத்திரங்களை அடித்து உடைத்து தகராறில் ஈடுபட்டுவந்துள்ளார். இவரின் தொல்லை தாங்க முடியாமல் குறித்த இளைஞன் வீட்டிற்கு வருகின்ற போது பெற்றோர் அவருக்கு பயந்து வீட்டை விட்டு ஓடி ஒளிந்துள்ளனர்.

இந்த நிலையில் கடந்த புதன்கிழமை அவரை கைது செய்து மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தினோம். அவரை 6 மாதங்களுக்கு புனர்வாழ்வுக்கு உட்படுத்த கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்துக்கு அனுப்புமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இவ்வாறு புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டவர் உட்பட கடந்த ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் செப்ரெம்பர் 30ஆம் திகதி வரையான 9 மாதங்களில் போதைப்பொருளுக்கு அடிமையான 15 பேரை நீதிமன்றில் முற்படுத்தியுள்ளோம். நீதிமன்ற கட்டளையின் பிரகாரம் அவர்கள் 15 பேரும் கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் சிகிச்சை பெற்று வருகின்றனர் - என்றும் மட்டக்களப்பு பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஐ)

# ஏறாவூரை சேர்ந்த பொலிஸ்காரர் பொலநறுவையில் மர்ம மரணம்!

மட்டக்களப்பு, ஒக். 02

ஏறாவூரை சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் மர்மமாக உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

பொலநறுவை - வெலிகந்தை பொலிஸ் நிலையத்தில் கடமை புரிந்து வந்தவரே கையில் காயத்துடன் இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

இவர், நேற்று முன்தினம் தனது கடமையை முடித்துவிட்டு அதிகாலை 3 மணியளவில் பொலிஸ் நிலைய விடுதியில் உறங்க சென்றவரே காலை 6 மணியளவில் சடலமாக மீட்கப்பட்டார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தரின் வலது கை மேற்பகுதியில் காயம் ஒன்று ஏற்பட்டு, அதிலிருந்து கடுமையாக இரத்தம் கசிந்துள்ளமை தெரியவந்துள்ளது.

இவ்வாறு மர்மமான முறையில் உயிரிழந்து காணப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஏறாவூர் பகுதியைச் சேர்ந்த ஹனீபா என்பவராவார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக பொலநறுவை மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# போராட்டத்தில் பங்கேற்க எண்மருக்கு நீதிமன்று தடை!

திருகோணமலை, ஒக். 02

இலுப்பைக்குளத்தில் அமைக்கப்படும் விகாரைக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று நடைபெற்ற போராட்டத்தில் பங்கேற்க இரா. சாணக்கியன் எம். பி., கோவிந்தன் கருணாகரம் எம். பி. ஆகியோர் உட்பட 8 பேருக்கு நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

திருகோணமலை - நிலாவெளி - இலுப்பைக்குளத்தில் விகாரை அமைக்கப்பட்டு வருகின்றது. இந்த விகாரை நிர்மாணத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், நிலாவெளி பொலிஸ் பொறுப்பதிகாரி திருகோணமலை நீதிவான் நீதிமன்றில் தடை உத்தரவு கோரினார். இதன்படி, பதில் நீதிவான் எம். பி. அன்பார் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான இராச. சாணக்கியன், கோவிந்தன் கருணாகரம், இலங்கை தமிழரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட தலைவர் சண்முகம் குகதாசன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கட்சியின் இளைஞர் அணியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் கிருஷ்ணபிள்ளை சிறீ பிரசாத், திருகோணமலை தமிழர் பேரவையின் தலைவர் ஆர். ஜெரோம், மற்றும் ரமேஷ் நிக்கலஸ் ஆகியோருக்கு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (ஐ)

# மத்திய தரைக் கடலை கடக்கமுயன்ற 2,500இற்கும் மேற்பட்டோர் மரணம்!

## ஐ. நா. அகதிகள் அமைப்பு

நியூயோர்க், ஒக். 02

**மத்தியதரைக் கடல் ஊடாக ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்லும் முயற்சியில் இந்த ஆண்டில் மட்டும் இதுவரை 2,500 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர் அல்லது காணாமல் போயுள்ளனர் என்று ஐக்கிய நாடுகள் அகதிகள் நிறுவனம் தெரிவித்துள்ளது.**

இதன்படி, இந்த ஆண்டில் ஒரு இலட்சத்து 86 ஆயிரம் பேர் ஐரோப்பிய நாடுகளை அடைந்துள்ளனர் என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஐ. நா. அகதிகள் நிறுவனத்தின் தலைவர் கூறுகையில்,

ஒரு இலட்சத்து 86 ஆயிரம் மக்கள் மத்தியதரைக் கடலை கடந்திருக்கின்றனர். இதில் 83 வீதமானவர்கள் - சுமார் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் பேர் இத்தாலியை அடைந்துள்ளனர்.

இந்த ஆண்டில் கடந்த செப்ரெம்பர் 24ஆம் நாள் வரை 2 ஆயிரத்து 500இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர் அல்லது காணாமல் போயினர். ஐரோப்பாவுக்கான தரைவழிப் பாதையும் இதைப்போன்றே ஆபத்து மிக்கது." என தெரிவித்தார்.

இந்த மரண எண்ணிக்கை கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதிகரித்துள்ளது. 2022 ஆம் ஆண்டில் மத்திய தரை கடலை கடக்கும் முயற்சியில் ஆயிரத்து 680 பேர் உயிரிழந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மாலைதீவு ஜனாதிபதி தேர்தல் சீன ஆதரவு வேட்பாளர் வெற்றி!



மாலே, ஒக். 02

மாலைதீவு ஜனாதிபதி தேர்தலில் சீன ஆதரவாளர் எனக் கருதப்படும் முகமட் முய்சு வெற்றி பெற்றுள்ளார். இந்தத் தேர்தலில் இந்திய ஆதரவு வேட்பாளர் எனக் கருதப்பட்ட ஜனாதிபதி இப்ராஹிம் சோலி தோல்வியடைந்துள்ளார்.

மாலைதீவு ஜனாதிபதி தேர்தல் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்தத் தேர்தலில் வாக்களிக்க 2 இலட்சத்து 82 ஆயிரம் பேர் தகுதி பெற்றிருந்தனர்.

இரண்டாவது சுற்று போட்டியில் அவர் 45 வயதான முய்சு வெற்றியை தனதாக்கினார். முகமட் முய்சுக்கு 53.9 வீத வாக்குகளும் சோலிக்கு 46 வீத வாக்குகளும் கிடைத்தன.

வெற்றி பெற்ற முகமட் முய்சு எதிர்வரும் நவம்பர் 17ஆம் திகதி ஜனாதிபதியாக பதவியேற்பார். (ஐ)



# மைக்கல் ஜக்சனின் தொப்பி ரூ. 2 1/2கோடிக்கு ஏலம் போனது

உலகப் புகழ் பொப் இசை கலைஞரான மறைந்த மைக்கல் ஜக்சனின் தொப்பி ஒன்று இலங்கை மதிப்பில் 2 கோடி 66 இலட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது.

ஏலம் போன அந்த தொப்பி மைக்கல் ஜாக்சன் புகழின் உச்சத்திலிருந்தபோது அவர் பயன்படுத்தியதாகும். பிளக் பெடோரா என்ற வகையை சேர்ந்த இந்த தொப்பி 77,640 யூரோவுக்கு ஏலம் போயுள்ளது.

மைக்கல் ஜக்சனின் முத்திரையுடனான அசைவுகளில் ஒன்று 'மூன் வாக்'. ஈர்ப்பு விசை குறைவான நிலவில் பரப்பிலான நடன அசைவுகளை பிரதியெடுத்த அந்த தனித்துவ அசைவுகள், பின்னர் பிரபு தேவா உட்பட பல்வேறு நடனக் கலைஞர்களால் உலகெங்கும் பின்பற்றப்பட்டன. அந்த நடன அசைவின்போது மைக்கல் ஜாக்சன் அணிந்திருந்த வகையில் பெடோரா ரக தொப்பியும் அவரின் தனி அடையாளமானது.

அப்படி அவர் முதல் முறையாக அணிந்திருந்த பெடோரா தற்போது ஏலத்துக்கு போயிருக்கிறது. பிரான்ஸ் தலைநகரான பாரிஸில் நடந்த ஏலத்தில் இந்த தொப்பி 60 ஆயிரம் முதல் ஒரு இலட்சம் யூரோக்கள் வரை ஏலம் போகும் என கணிக்கப்பட்டிருந்தது. அதன்படியே இந்த தொப்பி 77 ஆயிரத்து 640 யூரோக்களுக்கு ஏலம் போயுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவுடனான உறவை முறிக்கின்றது ஆப்கான்!

காபூல், ஒக். 02

ஆப்கானிஸ்தான் தலிபான் அரசாங்கம் இந்திய அரசாங்கத்திடமிருந்து போதிய ஆதரவைப் பெறாததால், இந்தியாவின் தலைநகரான புதுடில்லியில் உள்ள தனது தூதரகத்தை மூட தீர்மானித்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இந்தியாவுடன் தூதரக உறவை பேண வேண்டிய அவசியமில்லை என ஆப்கானிஸ்தான் அரசாங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்திய அரசாங்கத்தின் ஆதரவின்மை, ஆப்கானிஸ்தானின் தேவைகளை நிறைவேற்றுவதில் அரசாங்கத்தின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்ய இயலாமை, பணியாளர்கள் மற்றும் வளப்பற்றாக்குறை போன்ற காரணங்களால் இந்தியாவில் உள்ள ஆப்கானிஸ்தான் தூதரகம் இன்று முதல் தனது செயற்பாடுகளை இடைநிறுத்துவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நீண்டகால உறவுகள் மற்றும் நட்பைக் கருத்தில் கொண்டு இந்த கடினமான தீர்மானம் எடுக்கப்பட்டதாக ஆப்கானிஸ்தான் தூதரகம் மேலும் அறிவித்துள்ளது.

புதுடில்லியில் உள்ள ஆப்கானிஸ்தான் தூதரகத்திற்கு தூதர் ஃபரீத் மாமுண்ட்சே தலைமை தாங்கினார். அவர் அஷ்ரஃப் கானி அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட நிலையில் கடந்த 2021ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தலிபான் படைகளால் ஆப்கானிஸ்தானைக் கைப்பற்றிய போதிலும் அவரது சேவைகளைத் தொடர்ந்தார்.

ஆப்கானிஸ்தானில் உள்ள தலிபான் அரசை இந்தியா இன்னும் அங்கீகரிக்கவில்லை என்பதுதான் இந்திய-ஆப்கன் உறவுகள் பற்றிய விவாதத்தின் முக்கிய அம்சமாகும். (ஐ)

# துருக்கி பாராளுமன்றை தாக்க முயற்சி தீவிரவாதிகள் இருவர் சுட்டுக்கொலை!

## உள்துறை அமைச்சு அருகே தற்கொலை தாக்குதல்

அங்கரா, ஒக். 02

துருக்கி தலைநகர் அங்கராவில் பாராளுமன்றம் அருகே நேற்று நடந்த தாக்குதலில் தீவிரவாதிகள் இருவர் கொல்லப்பட்டனர்.

இதுகுறித்து துருக்கியின் உள்துறை அமைச்சர் அலி யார்லிகயா கூறுகையில்,

இன்று (நேற்று) ஞாயிற்றுக்கிழமை தனது அமைச்சக பணிமனை அருகில் ஒரு தற்கொலை வெடிகுண்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதேபோல் பொலிஸாருடன் நடந்த துப்பாக்கிச் சூட்டில் மற்றொரு தீவிரவாதி கொல்லப்பட்டார்.

துருக்கி தலைநகர் அங்கராவில் நடந்த இந்த தாக்குதல் சம்பவத்தில் பொலிஸ் அதிகாரிகள் இருவர் காயமடைந்துள்ளனர். கோடை விடுமுறைக்கு பின்னர் பாராளுமன்றம் திறக்கப்படுவதற்கு சில மணிநேரங்களுக்கு முன்பு இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை காலையில் பயங்கர வெடி சத்தம் கேட்டதாகவும், அதனை தொடர்ந்து துப்பாக்கி சூடு சத்தமும் கேட்டதாக துருக்கி ஊடகங்கள் தெரிவித்துள்ளன. குண்டு வெடித்த இடத்தில் படையினர் தடுப்பை ஏற்படுத்தியுள்ளனர். (ஐ)

# பாகிஸ்தான் தாக்குதலின் பின்னால் இந்தியா உள்ளது

## அந்நாட்டு உள்துறை அமைச்சர் சாடல்

இஸ்லாமாபாத், ஒக். 02

பாகிஸ்தானில் நடந்த இரு தற்கொலை தாக்குதல்களின் பின்னணியில் இந்தியாவே உள்ளது என்று அந்த நாட்டு உள்துறை அமைச்சர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

பாகிஸ்தான் பலுகிஸ்கான் மாகாணம் மற்றும் கைபர் பக்துன்சலா மாகாணத்தில் உள்ள மசூதிகளில் வெள்ளிக்கிழமை அடுத்தடுத்து தற்கொலை படை தாக்குதல்கள் நடந்தன.

இந்த இரு சம்பவங்களிலும் பலியானவர்கள் எண்ணிக்கை 65-ஆக உயர்ந்துள்ளது. இந்த சம்பவத்துக்கு இந்தியாதான் காரணம் என பாகிஸ்தான் குற்றஞ்சாட்டியுள்ளது.

இது தொடர்பாக அந்நாட்டு உள்துறை மந்திரி சர்பராஸ் புக்டி கூறுகையில்,

பாகிஸ்தானில் அடுத்தடுத்து நடத்தப்பட்ட தற்கொலை படை தாக்குலுக்கு இந்தியாவின் உளவு நிறுவனமே காரணம் - என்றார்.

# ரஷ்யாவை தாக்குவதற்கு முயற்சி 9 ட்ரோன்கள் சுட்டுவீழ்த்தப்பட்டன!

மொஸ்கோ, ஒக். 02

தங்கள் நாட்டின்மீது தாக்குதல் நடத்த முயன்ற உக்ரைனுக்கு சொந்தமான 9 ட்ரோன்களை சுட்டு வீழ்த்தியதாக ரஷ்யா அறிவித்துள்ளது.

ரஷ்யா-உக்ரைன் போர் 20 மாதங்களாக தொடர்ந்து நடைபெற்று வருகிறது. ஆரம்பத்தில் உக்ரைன் பெரும் தோல்வியை சந்தித்தது. பின்னர் ஐரோப்பிய நாடுகளின் ஆயுத மற்றும் பொருளாதார உதவிகளால் உக்ரைனும் பதிலடி கொடுத்து வருகிறது. அண்மை நாட்களாகஇரு நாடுகளும் அடிக்கடி ட்ரோன்கள் மூலம் தாக்குதல் நடத்துகின்றனர்.

அந்தவகையில் ரஷ்யாவின் பெல்கொரோட் பிராந்தியத்தை குறிவைத்து உக்ரைன் இராணுவம் சரமாரி ட்ரோன்கள் மூலம் தாக்குதல் நடத்தியது. இதில் 9 உராகன் எம்.எல்.ஆர்.எஸ். ட்ரோன்களை ரஷ்ய ராணுவத்தினர் சுட்டு வீழ்த்தினர். இதன் மூலம் உக்ரைனின் தாக்குதல் முயற்சி தடுத்து நிறுத்தப்பட்டதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்தது. (ஐ)

# தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்க பணிமனையை நிறுவ சட்டமூலம்!

கொழும்பு, ஒக். 02

**இலங்கையின் தேசிய ஐக்கியத்தை வலுப்படுத்தும் வகையில் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க பணிமனை ஒன்றை நிறுவுவதற்கான சட்டமூலம் விரைவில் பாராளுமன்றத்தில் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படவுள்ளது.**

புதிய சட்டமூலம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் நீதித்துறை சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷவால் கடந்த 25ஆம் திகதி வெளியிடப்பட்டது.

பொருளாதாரம், சமூகம், கலாச்சாரம் மற்றும் அரசியல் துறைகளில் ஒவ்வொரு குடிமகனுக்கும் சம வாய்ப்புகளை உறுதி செய்யும் வகையில் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகத்தை நிறுவுவதும், அடையாளத்தைப் பாதுகாத்து, பன்முகத்தன்மை மதிக்கப்படும் மற்றும் அனைத்து சமூகங்களும் நல்லிணக்கத்துடன் வாழும் சமூகத்தை உருவாக்குவதும் இந்த சட்டமூலத்தின் நோக்கமாகும்.

பல்வேறு சமூகங்களுக்கிடையில் முறுகல்களையும் முரண்பாடுகளையும் ஏற்படுத்தும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வுக்காக செயல்பட ஆர்வமுள்ள தரப்பினருக்கு ஆதரவளிப்பதற்கும் அரசாங்கத்துக்கு நடவடிக்கைகளைப் பரிந்துரைப்பது இந்தக் குழுவின் நோக்கங்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# தயிரின் விலை உயர்வு!



கொழும்பு, ஒக். 02

தயிர் சட்டி ஒன்றின் விலை 500 ரூபாய் வரை அதிகரித்துள்ளதாக தேசிய வாடிக்கையாளர் முன்னணி தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

நாட்டில் தற்போது உற்பத்தி செய்யப்படும் பாலின் விலை குறைவடைந்துள்ளதாலேயே தயிர்ச்சட்டியின் விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

மேலும், உலகில் அதிகளவில் பால் மாவை பயன்படுத்தும் ஐந்து நாடுகளில் இலங்கையும் உள்ளடங்குவதாக ஆய்வுகள் கூறுகின்றன.

இலங்கைக்கு தேவையான பாலில் 40 வீதம் மாத்திரமே உள்நாட்டிலிருந்து பெறப்படுவதோடு மீதமுள்ள 60 வீதமானது வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுவதாக அண்மையில் கால்நடை அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் டி.பீ. ஹேரத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# போராட்டங்களை ஒடுக்குவதற்காகவே சமூக ஊடகங்கள்மீது கட்டுப்பாடுகள்!

## சாடுகின்றது ஜே. வி. பி.



கொழும்பு, ஒக். 02

அரசாங்கத்துக்கு எதிராக அதிகரிக்கும் ஆர்ப்பாட்டங்களை கட்டுப்படுத்தும் நோக்கிலேயே அரசாங்கம் சமூக ஊடகங்களை கட்டுப்படுத்த முயல்கின்றது என ஜே. வி. பியின் செயல்குழு உறுப்பினர் சுனில் ஹந்துநெத்தி தெரிவித்துள்ளார்.

தென்கொரியாவில் இலங்கையர்கள் குழுவொன்றுடனான சந்திப்பின்போது அவர் இதனை தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் தங்கள் நடவடிக்கைகளை எதிர்க்கின்றனர் என்பதை அரசாங்கம் நன்கு அறிந்துள்ளதால் சமூக ஊடகங்களை கட்டுப்படுத்த அரசாங்கம் பல சட்டங்களை அறிவித்துள்ளது. ஊடகங்கள் பொது மக்களுக்கு தகவல்களை வழங்குகின்றன. அரசாங்கம் மக்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப செயல்படுகின்றது என்றால் மோசடியில் ஈடுபடவில்லை பொதுமக்களின் பணத்தை கொள்ளையடிக்கவில்லை என்றால் அரசாங்கம் அச்சமடையதேவையில்லை.

ஜனாதிபதி உட்பட அரசாங்கத்திற்கு மக்கள் தங்களுடன் இல்லை மக்கள் தங்களை எதிர்க்கின்றார்கள் என்பது நன்கு தெரிந்துள்ளது தற்போதைய ஜனாதிபதி மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒருவர் ஆகவே மக்கள் தன்கு எதிராக உள்ளனர் என்பது அவருக்கு தெரியும். அவர் மக்களின் ஆர்ப்பாட்டங்கள் குறித்து அச்சப்படுகின்றார் மக்கள் அரசாங்கத்தின் நடவடிக்கைகளை சகித்துக்கொண்டால் அவர் அச்சமடையத்தேவையில்லை.

ஊடகங்கள் சமூக ஊடகங்கள் தற்போது குறிப்பிடத்தக்க விதத்தில் மாற்றமடைந்துள்ளன அரசாங்கம் கடந்த காலத்தில் இலத்திரனியல் ஊடகங்களை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தது என தெரிவித்துள்ள ஜேவிபி உறுப்பினர் ஊடகங்களை ஒடுக்க அரசாங்கம் முயற்சித்தால் அரசாங்கத்தை மக்கள் ஒடுக்கமுயலும் முதல் தடவையாக அது மாறும்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவும் சமூக ஊடகங்களை கட்டுப்படுத்த முயன்றார் முகநூல், வட்ஸ்அப் போன்றவை களை முடக்கினார் மக்கள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை மக்கள் அதனை ஏற்றுக்கொண்டிருந்தால் அவர் இன்னமும் ஆட்சியில் இருந்திருப்பார் இதனை நினைத்துப்பார்த்தால் ரணில் விக்கிரமசிங்க அதனை செய்யமாட்டார் எனவும் சுனில் ஹந்துநெத்தி தெரிவித்துள்ளார். (ஐ)

# நான் அன்று கூறியதே இன்று பலித்துள்ளது!

## அஜித் நிவாட் கப்ரால் சொல்கிறார்

கொழும்பு, ஒக். 02

சர்வதேச நாணய நிதியத்திடம் கையேந்த செல்கின்றபோது அதனுடன் செய்யப்பட்ட உடன்பாடுகளை முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டிய சூழல் உருவாகும். அதனால் உள்நாட்டில் பெரும் நெருக்கடிகள் ஏற்படும் என்பதை இரண்டு ஆண்டுகளுக்கு முன்னதாகவே கூறியிருந்தேன். தற்போது அவ்வாறான நிலைமைகளே தோற்றுவிக்கப்பட்டுள்ளன என்றுமத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் முதலாம் தவணைக் கொடுப்பனவு மீளய்வு தொடர்பில் இலங்கை வந்திருந்த பீற்றர் புரூவர் தலைமையிலான கருத்துகள் தொடர்பில் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொருளாதார ரீதியான சில பின்னடைவுகள் ஏற்பட்டபோது, அவற்றை முகங்கொடுத்து மேலெழுவதற்கான நடவடிக்கைகளை உள்நாட்டிலும் இதர நிதி மூலங்கள் ஊடாகவும் முன்னெடுப்பதே பொருத்தமானது என்ற நிலைப்பாட்டை நான் வெளிப்படுத்தியபோது



என்னை கடுமையாக விமர்சித்தார்கள்.

அத்தோடு சர்வதேச நாணய நிதியத்திடம் செல்வது தான் ஒரே தீர்வு என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தி அச்செயற்பாட்டை மேற்கொண்டார்கள். தற்போது அனைத்து வழிகளும் அடைக்கப்பட்டதொரு நிலைமையே ஏற்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் குழுவினர் இலங்கைக்கு விஜயம் செய்து தமது முதலாவது மீளாய்வினை நிறைவு செய்துள்ளார்கள். அந்த மீளாய்வின் இறுதியில் அவர்கள் உள்நாட்டில் வரி வருமானத்தை அதிகரித்தல், கடன்மறுசீரமைப்பை மேற்கொள்ளுதல் உள்ளிட்ட விடயங்களை முன்னெடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன், அவ்வாறான செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு நிபந்தனைகள் நிறைவேற்றப்படும் வரையில் இரண்டாவது தவணைக்கொடுப்பனவுக்கான கால எல்லையை கூற முடியாதெனவும் சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கைக்கு அமைவாக நடவடிக்கைகளை எடுப்பதாக இருந்தால், மின்சாரப்பட்டியல், நீர்க்கட்டணம், வரி வருமானம் உள்ளிட்ட அனைத்தையும் அதிகரிக்க வேண்டியுள்ளது. இதேநேரம், நலத்திட்டங்களையும், அரச ஊழியர்களின் எண்ணிக்கையையும் வெகுவாகக் குறைக்க வேண்டியுள்ளது. மேலும் உள்நாட்டு கடன் மறுசீரமைப்பை செய்வதாக இருந்தால் ஊழியர் சேமலாப நிதியில் கைவைக்க வேண்டியுள்ளது.

அவ்வாறான செயல்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றபோது உள்நாட்டில் மக்கள் சாதாரணமானதொரு வாழ்க்கையை வாழ முடியதவொரு நிலையே உருவாகும். மக்கள் பெரும் நெருக்கடிகளுக்கு உள்ளாகுவார்கள். இதனால் குழப்பமான நிலைமைகளே மீண்டும் உருவெடுக்கும். ஆகவே, தனிமனிதனான என்னுடைய ஆருடத்தை அன்று நிராகரித்தவர்கள் தற்போது பொது மக்களுக்கு பொறுப்பான பதிலளிக்க வேண்டியவர்களாகியுள்ளனர் - என்றார். (ஐ)

# மிரட்டல்களால் நீதிபதி விலகியமை ஆழ்ந்த கவலைகளை தருகின்றன!

## ஹர்ச டி சில்வா எம். பி.

கொழும்பு, ஒக். 02

குருந்தூர்மலை விவகாரத்தில் உத்தரவுகளை பிறப்பித்ததால் மிரட்டல்களை எதிர்கொண்ட நீதிபதி ரி. சரவணராஜா பதவி விலகினார் என வெளியாகும் தகவல்களால் நான் ஆழ்ந்த கவலையடைந்துள்ளேன் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷா டி சில்வா தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் சில பிரிவினரின் மிரட்டல்கள் மனவருத்தமளிக்கின்றன. இந்த விடயத்தில் ஜனாதிபதியின் மௌனம் எமது ஜனநாயகம் தொடர்பானது. நீதிபதிகள் சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டுபவர்கள் அவர்களுக்கு எதிரான அச்சுறுத்தல் ஜனநாயகத்தை குறைமதிப்பிற்கு உட்படுத்துகின்றது எனவும் டுவிட்டரில் பதிவிட்டுள்ள அவர் அச்சமின்றி நீதியை வழங்குபவர்களை நாங்கள் பாதுகாக்கவேண்டும்.

பக்கச்சார்பற்ற விசாரணைக்கான குரல்களுடன் எங்களையும் இணைத்துக் கொள்ளும் நாம், ஐக்கியப்பட்டு இலங்கையின் நீதித்துறையின் சுதந்திரத்தை பாதுகாப்போம் - இலங்கையின் அடையாளத்தை தழுவுவோம் - என்றார். (ஐ)

# “தெற்காசியாவிலேயே மின் கட்டணம் அதிகம் செலுத்தும் நாடாகும் இலங்கை!”



கொழும்பு, ஒக். 02

உத்தேச மின்சார கட்டண அதிகரிப்பு இடம்பெற்றால் தெற்காசியாவிலேயே அதிக மின்சார கட்டணம் செலுத்தும் நாடாக இலங்கை மாறும் என்று எரிசக்தி நிபுணர் திலக் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

தெற்காசியாவில் அதிக மின்சார கட்டணம் செலுத்தும் நாடுகளில் இலங்கை மூன்றாவது இடத்தில் உள்ளதாக தெரிவித்தார். மின்சார உற்பத்திப் பொருட்களின் விலையை குறைப்பதற்கு புதிய முறையொன்று அவசரமாக அறிமுகப்படுத்தப்பட வேண்டும் - என்று கூறினார். (ஐ)

# மாற்று திறனாளிகளுக்கான சட்டம் குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழு ஆராய்வு

கொழும்பு, ஒக். 02

மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் பாதுகாப்பு சட்டமூலத்தின் 44 மற்றும் 45 பிரிவுகளுக்கு அமைய வளாகங்களுக்குள் நுழைவதற்கும், தேடுதலை நடத்துவதற்கும், விசாரணை செய்வதற்கும், தனிநபர்களை விசாரிப்பதற்கும் மாற்றுத் திறனாளிகள் தொடர்பிலான தேசிய சபைக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளதாக, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் நீதியரசர் எல்.டி.பி. தெஹிதெனிய கையொப்பமிட்டு நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய சபைக்கு உறுப்பினர்களை நியமிப்பதில், அமைச்சர் மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்கள் உட்பட்டவர்களால் உத்தியோகபூர்வ அதிகாரத்துடன் நியமிக்கப்படும் 13 உறுப்பினர்களுக்கு மேலதிகமாக, ஏனைய 12 உறுப்பினர்களை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்களின் ஆலோசனையுடன் ஜனாதிபதியினல் நியமிக்கப்படுகின்றனர்.

இந்த நியமனச் செயல்முறையானது, நியமனம் பெற்றவர்களின் சுதந்திரம் போதுமான அளவு உத்தரவாதம் அளிக்கப்படவில்லை என சுட்டிக்காட்டியுள்ள ஆணைக்குழு, அமைப்பு மற்றும் நியமன செயல் முறையை மீள்பரிசீலனை செய்ய பரிந்துரைத்துள்ளது.

சபையின் சுயாதீனத்தை உறுதிப்படுத்துவதற்கு போதிய பாதுகாப்புகள் இல்லாத நிலையில், இவ்வாறான பரந்த அதிகாரங்களை சபைக்கு வழங்குவது பொருத்தமற்றது என மனித உரிமைகள் ஆணைக்குழு அமைச்சரிடம் மேலும் வலியுறுத்தியுள்ளது.

"அத்தகைய அதிகாரங்களை தன்னிச்சையாக செயல்படுத்துவது, அரசியலமைப்பின் பிரிவு 12 (1) இன் கீழ் உத்தரவாதம் அளிக்கப்பட்ட சட்டத்தின் சமமான பாதுகாப்பிற்கான அடிப்படை உரிமை உட்பட தனிநபர்களின் அடிப்படை உரிமைகளை மீறுவதற்கு வழி வகுக்கும்." என்று அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில், மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் பாதுகாப்பு சட்டமூலத்தின் 44 மற்றும் 45 பிரிவுகளை, மனித உரிமைகள் ஆணைக்குழு மீள்பரிசீலனை செய்யுமாறு பரிந்துரைத்துள்ளதோடு, உள்நுழைதல், தேடுதல்கள் மற்றும் விசாரணைகளை அங்கீகரிக்கும் அதிகாரங்கள் நீதித்துறை மேற்பார் வைக்கு உட்பட்ட அரசியல் ரீதியாக சுயாதீனமான நிறுவனத்திற்கு வழங்கப் பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.

மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் சாசனத்தின் கீழ் இலங்கை தனது கடமைகளை நிறைவேற்றுவதை உறுதிப்படுத்தும் வகையில் முன்வைக்கப்பட்டுள்ள இந்த சட்டமூலம், "மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளைப் பாதுகாத்தல், ஊக்குவித்தல் மற்றும் அவற்றை நிறைவேற்றுவதற்கான பெறுமதியான சட்ட கட்டமைப்பை ஏற்படுத்துவதற்காக" சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

2023 செப்டெம்பர் 21 அன்று நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்சவுக்கு அனுப்பிய கடிதத்தில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, தனிநபர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கான வரைவு தொடர்பாக 5 பொதுவான பரிந்துரைகளையும், 19 பிரிவுகள் தொடர்பான தனது அவதானிப்புகளையும் பரிந்துரைகளையும் தனித்தனியாக வழங்கியுள்ளது.

இதன்படி, பொருத்தமான தங்குமிடத்தின் தரம், இந்த வரைபின் விதிகளில் மிகவும் பரந்த அளவில் ஒருங்கிணைக்கப்பட வேண்டும்.

மாற்றுத்திறனாளிகளின் உரிமைளைப் பாதுகாக்க, ஊக்குவித்தல் மற்றும் நிறைவேற்றுவதற்காக அரசு நடவடிக்கை எடுக்கையில, பாலினம் மற்றும் வயது உணர்திறன் ஆகியவற்றில் குறிப்பிட்ட அர்ப்பணிப்புடன், குறிப்பாக மாற்றுத் திறனாளிகள் மற்றும் பெண்கள் மற்றும் சிறுவர்களின் "பல்வேறு" அல்லது "இடைப்பிரிவு" பாகுபாட்டை எதிர்கொள்ளும் யோசனை பரந்த அளவில வரைபில் ஒருங்கிணைக்கப்பட வேண்டும்.

சட்டமூலத்தின் மூலம் முன்வைக்கப்பட்டுள்ள அதன் சுயாதீன கண்காணிப்பு பொறிமுறையாக ஆணைக்குழுவின் பாத்திரத்தின் துல்லியமான தன்மை மற்றும் நோக்கம் குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் அர்த்தமுள்ள கலந்துரையாடல் நடத்தப்பட வேண்டும்.

மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய சபையின் அமைப்பு, நியமனம் செயல் முறை மற்றும் அதிகாரங்கள் ஆகியவை அரசியலமைப்பில் பொதிந்துள்ள மக்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் அதிக சுதந்திரத்தை உறுதிப்படுத்தும் வகையில் மீள்பரிசீலனை செய்யப்பட வேண்டும்.

மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய சபையின் கீழ் உள்ள அமைச்சு, நீதி அமைச்சாக இருக்க வேண்டும்.

சட்டமூலத்தின் 19 உறுப்புரைகளை, ஒவ்வொன்றாக எடுத்து, ஆணைக்குழுவால் அவதானிக்கப்பட்டுள்ள குறைபாடுகள் மற்றும் இது தொடர்பான ஆணைக்குழுவின் பரிந்துரைகள் ஜனாதிபதிக்கும் பிரதி செய்யப்பட்டு அனுப்பப்பட்ட இந்தக் கடிதத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

உறுப்புரை ஒன்பதானது ஐக்கிய நாடுகளின் மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் தொடர்பான சாசனத்தின் 18ஆவது பிரிவின் பல கூறுகளைக் கொண்டிருந்தாலும், ஒருவர் நாட்டை விட்டு வெளியேற அல்லது உள்நுழைவதற்கான சுதந்திரம் உட்பட இயக்க சுதந்திரம் தொடர்பான விடயங்களை 9ஆவது உறுப்புரை குறிப்பிடவில்லை என சுட்டிக்காட்டியுள்ள ஆணைக்குழு வரைபில் அந்த விடயம் வலுப்படுத்தப்பட வேண்டுமென பரிந்துரைத்துள்ளது.

உறுப்புரை 10ஐ அவதானித்துள்ள ஆணைக்குழு, மாற்றுத்திறனாளி குழந்தைகள் தொடர்பான அனைத்து விடயங்களிலும், "குழந்தைகளின் நலன்களை" முதன்மையாகக் கருத்தில் கொள்ள வேண்டும் என பரிந்துரைத்துள்ளது.

மாற்றுத்திறனாளிகள் பற்றிய உறுப்புரை 15, பெண்களும் சிறுமிகளும் "பல பாகுபாடுகளை" எதிர்கொள்வதைக் குறிப்பிடவில்லை என்பதைச் சுட்டிக் காட்டிய ஆணைக்குழு, அவர்கள் பாலினம் மற்றும் மாற்றுத்திறனாளி ஆகிய இரண்டிலும் பாகுபாட்டை எதிர்கொள்வதைக் குறிப்பிடுமாறு பரிந்துரைத்துள்ளது.

உறுப்புரை 22இன் ஊடாக, மாற்றுத் திறனாளிகளுக்கும், ஏனையவர்களுக்கு போன்று தரமான பராமரிப்பை வழங்கும் நோக்கத்துடன் பொது மற்றும் சுகாதார நிபுணர்களுக்கு தரநிலைகளை நிர்ணயிப்பதற்கும் பயிற்சிகளை வழங்குவதற்கும் அது கடமைகளை உள்ளடக்கியிருக்க வேண்டும் எனவும் ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

இவை தவிர, சட்டமூலம் தொடர்பில் கவனத்தில் கொள்ள வேண்டிய பல விடயங்கள் குறித்தும் ஆணைக்குழு தனது கடிதத்தில் வலியுறுத்தியுள்ளது.

அதற்கமைய, அனைத்து மாற்றுத் திறனாளிகளின் "வாழ்வதற்கான உரிமை" குறித்த குறிப்பிட்ட விதிகள் வரைபில் சேர்க்கப்பட வேண்டுமென ஆணைக் குழு பரிந்துரைத்துள்ளது.

மேலும், ஒருவரின் உடல் மற்றும் மன ஒருமைப்பாட்டுக்கு மதிப்பளிக்கும் உரிமையை வரைபில் குறிப்பாக சேர்க்க வேண்டும் எனவும், மாற்றுத்திறனாளிகளின் தனியுரிமைக்கான உரிமை சட்ட வரைபில் அங்கீகரிக்கப்பட வேண்டும எனவும் ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

முறையாக அடையக்கூடிய தரத்திற்கு ஏற்ப போதுமான வாழ்க்கைத் தரம் மற்றும் சமூகப் பாதுகாப்பிற்கான உரிமையையும் இந்த வரைபு அங்கீகரிக்க வேண்டுமென இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

17 ஜூலை 2023 அன்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் அமைச்சு பகிர்ந்து கொண்ட மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் பாதுகாப்பு சட்ட வரைபு குறித்து, ஆணைக்குழு தனது அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளை முன்வைத்து, 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்தின் பிரிவு 10 (உ) இன் படி, "அடிப்படை உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் சட்டங்களை இயற்றுவதில் அரசுக்கு ஆலோசனை வழங்குவதும் உதவுவதும்..." என்ற ஆணையை நிறைவேற்ற நீதி அமைச்சு வழங்கும் ஒத்துழைப்புக்கு ஆணைக்குழு தனது நன்றியைத் தெரிவித்துள்ளது.

(ஐ)

## பௌத்தம்...

நாம் பெருமை அடைய வேண்டும்

- இவ்வாறு கொழும்பு பாமன்கடை சிறீ மகா விகாரையின் பிரதம தேரர் கலாநிதி பான்டே வல்பொல பியனந்த தேரர் பாராளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், உதய கம்மன்பில, இந்திய தூதர் கோபால் பாக்லே ஆகியோர் முன்னிலையில் தெரிவித்துள்ளார்.

கலாநிதி பான்டே வல்பொல பியனந்த தேரரின் 80ஆவது அகவை நிறைவை சிறீ மகா விகாரை பக்தர்களின் நிறைவேற்று சபையும் மக்களும் கொண்டாடினர்.

இதில் உரையாற்றிய வல்பொல பியனந்த தேரர் மேலும் கூறியவை வருமாறு,

கணிசமான பண்டைய தமிழ் சங்க கால அங்கத்தவர்கள் இவ்வுலகில் பௌத்தத்துக்கு பெரும் பங்களிப்புகள் வழங்கி உள்ளார்கள். முதலாவது, புத்த கோஷ மகா தேரர் மற்றும் அனுருத்த மகா தேரர் ஆகியோர் அபிதர்ம காவியத்தை எழுதினார்கள்.

அமெரிக்காவிலும், ஆனந்த குமார சுவாமியே ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் பௌத்த கல்வியை, 1930களில் போதிக்க ஆரம்பித்தார். ஆகவே பௌத்தம் என்பது சிங்கள பௌத்தர்களுக்கு மாத்திரம் சொந்தமானது அல்ல. அது உலகத்துக்கு சொந்தமானது. பண்டைய காலங்களில் தமிழ் சங்ககால அங்கத்தவர்களே பௌத்தத்தை வளர்த்து எடுத்தார்கள். இதை நாம் பெருமையுடன் கூறி வைக்க வேண்டும் - என்றார். (ஐ)

## விபத்தில்...

புதுக்குடியிருப்பில் இருந்து கைவேலியை நோக்கி பயணித்தபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இதில், படுகாயமடைந்த இளைஞர் புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

புதுக்குடியிருப்பை சேர்ந்த 28 வயது இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவராவார். (ஐ)

## எரிபொருள்...

லீற்றர் 421 ரூபாயாகவும் மண்ணெண்ணெய் 11 ரூபாய் அதிக ரித்து லீற்றர் 242 ரூபாயாகவும் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, நேற்று மாலை 6 மணிக்கு நடைமுறைக்கு வரும் வகையில் சினோபெக் எனர்ஜி லங்கா நிறுவனம் எரிபொருட்களின் விலையை திருத்தியது.

92 ஒக்ரைன் பெற்றோல் விலை மாற்றப்படவில்லை. 95 ரக பெற்றோல் 6 ரூபாய் அதிகரித்து லீற்றர் 420 ரூபாயாகவும் ஓட்டோ டீசல் 10 ரூபாய் உயர்ந்து 348 ரூபாயாகவும் சுப்பர் டீசல் 61 ரூபாய் உயர்ந்து லீற்றர் 417 ரூபாயாகவும் விற்பனை செய்யப்படவுள்ளன. (ஐ)

## அரசை...

அடையாள எதிர்ப்பு போராட்டத்தை நடத்தவுள்ளோம்.

இந்தப் போராட்டத்தில் கிளிநொச்சி மாவட்டத்தின் வர்த்தக சமூகத்தினர், சேவைச் சந்தை வர்த்தக சமூகத்தினர், தொழில் சங்கங்கள், பொதுமக்கள் எல்லோரும் திரண்டுவந்து போராட்டத்தில் பங்கேற்க வேண்டும் - என்றார். (ஐ)

## நாளொன்றில்...

செயல்பாடுகளில் ஈடுபடுகின்றனர் என்று சிறுவர் மற்றும் இளம்பருவ உளநலம் தொடர்பான மருத்துவ நிபுணர் மியுரு சந்திரதாச தெரிவித்துள்ளார்.

அத்துடன், சிறுவர்களுக்கு பெற்றோரின் அரவணைப்பு அவசியம் எனவும், சில சமயங்களில் பெற்றோரின் அரவணைப்பை இழப்பதன் காரணமாக கைபேசி மற்றும் சமூக ஊடகங்களின் பயன்பாட்டுக்கு அதிக அடிமையாகின்றனர் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, இ-சிகரெட் பாவனைக்கு சிறுவர்களை ஊக்குவிப்பது சமூக ஊடக துஷ்பிரயோகத்தின் மற்றுமோர் ஆபத்தான அம்சமாக அடையாளம் காணப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

## எரிவாயு...

அறிவிக்கப்படும் என்று லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

இதன்படி, எரிவாயுவின் விலையில் சிறிது அதிகரிப்பு ஏற்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த மாதம் 12.5 கிலோ எடை கொண்ட லிட்ரோ எரிவாயுவின் விலை 145 ரூபாயாக அதிகரிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தடை...

விரட்டியடித்தனர்.

இந்தப் போராட்டத்துக்கு திருகோணமலை நீதிமன்றம் தடை விதித்ததுடன், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான கோவிந்தன் கருணாரட்ணம், இரா. சாணக்கியன் உட்பட 8 பேருக்கும் தடை விதித்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஜனாதிபதி...

பாராளுமன்றத்தின் மூலம் ஜனாதிபதியாக தெரிவு செய்யப் பட்ட ரணில் விக்கிரமசிங்கவின் பதவிக் காலம் அடுத்த ஆண்டு செப்ரெம்பர் இறுதியில் நிறைவடையவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# ஐந்து வயதுக்குட்பட்ட சிறாரின் இறப்பு விகிதம் அதிகரிக்கிறது

## சுகாதார அமைச்சு

கொழும்பு, ஒக். 02

**ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதம் அதிகரித்து வருவதாக சுகாதார அமைச்சு தொடர்பாக தேசிய கணக்காய்வு பணி மனையின் அறிக்கையிலேயே இந்த விடயம் வெளிப்பட்டுள்ளது.**

அதன் கணக்காய்வு அறிக்கையின்படி 05 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு எண்ணிக்கை ஆயிரம் பிறப்புகளில் 12.3 ஆக அதிகரித்துள்ளது.

சுகாதார அமைச்சின் பேண்தகைமை சுட்டெண்ணின்படி 05 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளின் இறப்பு எண்ணிக்கை 2030 ஆம் ஆண்டளவில் ஆயிரம் பிறப்புகளில் 07 ஆக பராமரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

டிசெம்பர் 31, 2021 நிலவரப்படி ஆயிரத்துக்கு 10.5 ஆக இருந்த இறப்பு எண்ணிக்கை டிசெம்பர் 31, 2022 இற்குள் 12.3 ஆக மோசமாக சென்றுள்ளது என்றும் தெரியவந்துள்ளது. மேலும், மகப்பேறு இறப்பு விகிதம் ஒரு இலட்சம் பிறப்புகளுக்கு 29.5 ஆக அதிகரித்து வருவதாகவும், புதிதாக பிறந்த குழந்தை (ஒரு மாதத்துக்கு உட்பட்ட குழந்தைகள்) இறப்பு விகிதம் 1000 பிறப்புகளுக்கு 6.8 ஆக அதிகரித்து வருவதாகவும் அறிக்கை கூறுகிறது. (ஐ)

# மலேசியாவில் மூவர் கொலை; கைதானோர் தொடர்ந்து மறியலில்!

கோலாலம்பூர், ஒக். 02

மலேசியாவில் மூன்று இலங்கையர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள இரண்டு இலங்கையர்கள் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களை எதிர்வரும் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கோலாலம்பூர் குற்றவியல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மலேசிய தலைநகர் கோலாலம்பூர் அருகில் செந்துல் என்ற பிரதேசத்தில் வீடொன்றில் கடந்த மாதம் 22 ஆம் திகதி மூன்று இலங்கையர்களின் உடலை மலேசிய பொலிஸார் கைப்பற்றினர். இது தொடர்பில்,

சடலங்கள் மீட்கப்பட்ட வீட்டின் உரிமையாளர்களான கணவன், மனைவியை பொலிஸார் கைது செய்திருந்தனர்.

கொலை செய்யப்பட்ட மூன்று பேரில் இவர்களின் 20 வயதான மகனும் அடங்குவார். கொலை தொடர்பாக நடத்தப்படும் விசாரணைகள் இன்னும் முடிவடையவில்லை என்பதால், கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு பொலிஸார் விடுத்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம், அவர்களை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளது. (ஐ)

# திருமலை விபத்தில் குடும்பஸ்தர் மரணம்!

திருகோணமலை, ஒக். 02

திருகோணமலை - சேருநுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தங்கநகர் கிராமத்தில் உழவு இயந்திரம் விபத்துக்குள்ளானதில் மூன்று பிள்ளைகளின் தந்தை உயிரிழந்தார்.

இந்த விபத்து நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 11.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இதில் மூதூர் - பாரதிபுரம் கிராமத்தை சேர்ந்த சுந்தரலிங்கம் சுந்தரவதனன் (வயது 39) என்பவரே உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது, உழவு வேலைக்காக பாரதிபுரம் பகுதியில் இருந்து கிளிவெட்டி - தங்கநகர் நோக்கிச் சென்றபோது தங்கநகர் பகுதியில் வைத்து உழவு இயந்திரம் வேகக் கட்டுப்பாட்டை இழந்து அருகில் உள்ள வாய்க்காலில் விழுந்து. இதில் அவர் உயிரிழந்தார்.

விபத்து குறித்து சேருநுவர பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# கடந்த வருடம் அடைக்கப்பட்ட கைதிகளில் 2,340 பேர் பட்டதாரிகள்!

கொழும்பு, ஒக். 02

கடந்த வருடம் சிறையில் அடைக்கப்பட்ட கைதிகளில் 2,340 பேர் பட்டதாரிகள் என தெரியவந்துள்ளது. நாட்டின் பொருளாதார மற்றும் சமூக புள்ளிவிவரங்கள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கைக்கமைய, இந்த விடயம் தெரியவந்துள்ளது.

சிறையில் அடைக்கப்பட்ட பட்டதாரிகளில் பெண்கள் 41 பேரும் ஆண்கள் 2,299 பேரும் உள்ளனர்.

சிறையில் உள்ள பட்டதாரிகள்

கடந்த மூன்று ஆண்டுகளில் கடந்த ஆண்டிலேயே அதிக எண்ணிக்கையிலான பட்டதாரிகள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் என்பதையும் இந்தப் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன.

கடந்த ஆண்டில் இளங்கலை பட்டப்படிப்பை விட உயர்கல்வி பெற்ற 121 பேர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். கடந்த ஆண்டு சிறையில் அடைக்கப்பட்ட கைதிகளில் உயர்தரத்தில் தேர்ச்சி பெற்ற கைதிகளின் எண்ணிக்கை 8,420 ஆகும்.

சாதாரண தரத்தில் தேர்ச்சி பெற்ற கைதிகளின் எண்ணிக்கை 7,168 ஆகும். சிறையில் அடைக்கப்பட்டவர்களில் மிகக் குறைவானவர்களே பாடசாலைக்கு செல்லாதவர்களாகும், அவர்களின் எண்ணிக்கை 836 பேராகும்.

கடந்த வருடத்தில் தரம் 08 இல் சித்தியடைந்த 6,747 பேர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். கடந்த ஆண்டு சிறையில் அடைக்கப்பட்ட மொத்த 30,331 கைதிகளில் 17,928 பேர் உயர் கல்வித் தகுதி பெற்றவர்கள் என்பதையும் இந்தத் தரவு காட்டுகிறது. (ஐ)

# நீதிவான் சரவணராஜாவின் விவகாரத்தில் இலங்கையின் அடக்குமுறை வெளிப்பட்டுள்ளது!

## பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 02

நீதிவான் சரவணராஜாவின் பதவி விலகலும், நாட்டை விட்டு வெளியேறிய விடயமும் உண்மையிலேயே இலங்கையின் அடக்குமுறையை வெளிப்படுத்தி இருக்கிறது என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி பதவி விலகியமை குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்க இல்லையே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதுவரைக்கும் இலங்கை உலகத்துக்கு தாங்கள் ஒரு ஜனநாயகத்தை பேணுகின்ற நாடாக காட்டிக்கொண்டு சட்டத்தின் ஆட்சியையும், நல்லாட்சியையும் கடைப்பிடிக்கின்ற ஒரு நாடாகவும், தமிழர் விவகாரமானது பயங்கரவாதத்துக்கு எதிரான செயல்பாடாகவும் அந்த வகையிலே பயங்கரவாதத்தை ஆதரிப்போரும் தொடர்ந்து 2009இற்கு பிறகு மலர்வாக்கம் செய்கின்றவர்களுக்கு எதிராகவும் தான் தாங்கள் நடவடிக்கை எடுப்பதாகவும் ஆனால், அதை தாண்டி தாங்கள் முழுமையாக ஒரு நீதியையும் நியாயத்தையும் ஏற்று செயற்படுகின்ற ஒரு தரப்பாகத்தான் காட்டிக்கொண்டு வந்தார்கள்.

ஆனால், நீதிவான் சரவணராஜாவின் பாதுகாப்பு இந்த கபட நாடகத்தை முற்று முழுதாக அம்பலப்படுத்துவதாகவும் அத்தோடு இலங்கையிலே தொடர்ந்தும் ஒரு சிங்கள - பௌத்தத்துடைய இனவாத போக்கை தவிர்ந்த வேறு எந்தவொரு செயல்பாட்டுக்கும் இடமே கிடையாது. நீதித்துறை உட்பட அந்த சிங்கள - பௌத்த பேரினவாதத்துக்கு அடிணிந்து செயல்படுகின்ற - அதை கடைப்பிடிக்கின்ற பாதுகாக்கின்ற ஒரு துறையாக அமைந்துள்ளது.

ஆகவே, தமிழர்களுக்கு அல்லது முஸ்லிம்களுக்கு அல்லது சிங்கள பௌத்தர்களுடைய நலன்கள் அல்லாத வேறு எந்தவொரு தரப் புக்கும் எதிராகவும் வந்து நீதியை நியாயத்தை தேட முடியாது என்ற விடயம் இந்த நீதிவான் சரவணராஜா உடைய பாதிப்பின் ஊடாக நிரூபிக்கப்பட்டுள்ளது. மோசமான இனவாத செயல்பாடுகள்

அந்தவகையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி, அவருக்கு எதிராக, அவரை குறி வைத்து அவர் உறுதியாகவும் துணிந்து ஒரு நீதிக்காக எடுத்த முடிவுகளுக்கு பாராட்டை தெரிவிக்கின்ற அதே



நேரம், அவருக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள மிக மோசமான இனவாத செயல்பாடுகள், அச்சுறுத்தல்கள், அடிபணிய வைக்கக்கூடிய முயற்சிகள் போன்ற அனைத்தையும் நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம்.

அத்தோடு நானும் எங்களுடைய செயலாளர் செல்வராஜா கஜேந்திரனும் ஜெனிவாவின் ஐரோப்பிய நாடுகளுடைய தலைநகரங்களுக்கும் சென்றுகொண்டிருக்கின்ற இந்த சந்தர்ப்பத்திலே நீதிவான் சரவணராஜாவுடைய இந்த சம்பவத்தை நாங்கள் இங்கு பதிவு செய்துகொண்டு வருகின்றோம். எம்மை பொறுத்தவரையில் இதனை ஒரு கண்துடைப்பு செயல்பாடாகத்தான் சர்வதேச சமூகமும் பார்க்கும் - என்றார்.

# ஜனாதிபதி வேட்பாளர் யார்? ஐக்கிய மக்கள் சக்திக்குள் மோதல்!

கொழும்பு, ஒக். 02

ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்திக்குள் மோதல் வெடித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏனெனில், கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸவும், சரத் பொன்சேகாவும் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கத் தயாராக உள்ளனர். அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாஸ முன்மொழியப்பட்டாலும், சரத் பொன்சேகாவும் ஜனாதிபதி தேர்தலை இலக்கு வைத்து நாடு முழுவதும் பேரணிகளை ஏற்பாடு செய்து வருகின்றார்.

அதன் காரணமாக சரத் பொன்சேகா தொடர்பில் கட்சியின் ஏனைய உறுப்பினர்கள் கட்சித் தலைமைக்கு பல அறிவித்தல்களை வழங்கியுள்ளனர். ஆனால், எந்த அறிவிப்பையும் பொருட்படுத்தாமல் பொன்சேகா தனது பணியைத் தொடர்ந்து வருகிறார். இதனால் அந்தக் கட்சிக்குள் பெரும் மோதல் நிலை உருவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# மாலைதீவு புதிய ஜனாதிபதிக்கு ஜனாதிபதி ரணில் வாழ்த்து

கொழும்பு, ஒக். 02

மாலைதீவின் புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டிருக்கும் மொஹமட் முய்சுவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வாழ்த்து தெரிவித்துள்ளார்.

தொலைபேசி அழைப்பு மூலமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது வாழ்த்துகளைக் கூறியுள்ளார்.

இலங்கை - மாலைதீவு மக்களின் மேம்பாட்டுக்காக இரு நாடுகளுக்கும் இடையில் காணப்படும் இரு தரப்பு உறவுகளை பலதரப்பு கூட்டு செயன்முறைகளாக பலப்படுத்திக்கொள்ளவும்

இதேபோல் கல்வி, சுகாதாரம்,பொருளாதாரம் மற்றும் முதலீட்டு துறைகளில் இரு தரப்பு உறவுகளை பலப்படுத்திக்கொள்வது தொடர்பிலும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

மாலைதீவின் புதிய ஜனாதிபதியின் ஆட்சியில் சுபீட்சம் கிட்டும் என்ற எதிர்பார்ப்புடன், அந்நாட்டின் புதிய அரசாங்கத்துக்கும் மக்களுக்கும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வாழ்த்து தெரிவித்துள்ளார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 02.10.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# பயிற்சி ஆட்டத்தில் ஸ்ரார்க் ஹட்ரிக் விக்கெட் வீழ்த்தினார்!




குவாஹாட்டி, ஒக். 02

நெதர்லாந்துக்கு எதிரான பயிற்சி ஆட்டத்தில் அவுஸ்திரேலிய வீரர் மிட்செல் ஸ்டார்க் ஹட்ரிக் விக்கெட் எடுத்து அசத்தினார்.

உலகக் கிண்ணத் தொடருக்கு முன்னதாக உலகக் கிண்ணத்தில் பங்கேற்கும் அணிகள் தங்களுக்குள் பயிற்சி போட்டிகளில் விளையாடி வருகின்றன. நேற்றுமுன் தினம் பயிற்சி ஆட்டத்தில் அவுஸ்திரேலியா மற்றும் நெதர்லாந்து அணிகள் மோதின.

இந்தப் போட்டிக்கு மழையின் காரணத்தால் முடிவு கிடைக்கவில்லை. முன்னதாக, மழை தொடர்ந்து பெய்ததால் போட்டி 23 ஓவர்களாக குறைக்கப்பட்டது. முதலில், துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 7 விக்கெட்களை இழந்து 166 ஓட்டங்கள் குவித்தது. அவுஸ்திரேலியா தரப்பில் அதிகபட்சமாக ஸ்டீவ் ஸ்மித் 55 ஓட்டங்கள் எடுத்தார்.

167 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கியது நெதர்லாந்து. அந்த அணி 14.2 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 84 ஓட்டங்கள் எடுத்திருந்தது. அப்போது மழை குறுக்கிட்டது. நீண்ட நேரம் ஆகியும் மழை நிற்காததால் ஆட்டம் நிறுத்தப்பட்டது. இந்தப் போட்டியில் அவுஸ்திரேலிய வேகப் பந்து வீச்சாளர் மிட்செல் ஸ்டார்க் ஹட்ரிக் விக்கெட் வீழ்த்தி அசத்தினார்.

அவர் வீசிய முதல் ஓவரின் 5ஆவது பந்தில் மக்ஸ் ஒடௌத் விக்கெட்டையும் கடைசி பந்தில் வெஸ்லி பரேசி விக்கெட்டினையும் வீழ்த்தினார். அதன்பின் அவர் வீசிய அடுத்த ஓவரின் முதல் பந்தில் பாஸ்-டி-லீட் விக்கெட்டை எடுத்து ஹட்ரிக் விக்கெட்கள் எடுத்து அசத்தினார்.




# இதுவே எனது கடைசி உலக கிண்ணமாகலாம்!

## இந்திய வீரர் அஸ்வின்

குவாஹாட்டி, ஒக். 02

இதுவே எனது கடைசி உலகக் கிண்ணப் போட்டியாக இருக்கலாம் என்று இந்திய கிரிக்கெட் அணி வீரர் அஸ்வின் கூறினார்.

உலகக் கிண்ணப் போட்டிக்குத் தேர்வு செய்யப்பட்டிருந்த சுழற்பந்து வீச்சாளர் அக்சர் பட்டேல், காயம் காரணமாக விலகினார். இதையடுத்து கடைசி நேரத்தில் அணிக்குள் கொண்டு வரப்பட்டார் 36 வயதான அஸ்வின்.

இந்நிலையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், உண்மையை சொல்ல வேண்டும் என்றால், உலகக் கிண்ணத் தொடருக்கான இந்திய அணியில் தெரிவு செய்யப்படுவேன் என்று சிறிதும் எதிர்பார்க்கவில்லை. எப்போதும் கிரிக்கெட்டை ரசித்து விளையாட வேண்டும் என்பதே கடந்த 5 ஆண்டுகளில் எனது தாரக மந்திரமாக உள்ளது.

இந்த உலகக் கிண்ணத் தொடரையும் ரசித்து விளையாட விரும்புகிறேன். உலகக் கிண்ணப் போட்டிக்காக இந்திய வீரர்கள் அனைவரும் தீவிரமாக தயாராகி வருகிறோம்.

அதேபோல் எதிரணியின் அழுத்தத்தை சமாளிக்க பயிற்சி பெற்று வருகிறோம்.

உலகக் கிண்ணத் தொடரில் அனைத்து வீரர்களுக்கும் அழுத்தம் என்பது உச்சத்தில் இருக்கும். ஆனால் எனக்கு இந்த உலகக் கிண்ணத்தை ரசித்து விளையாட வேண்டும் என்ற ஆசை இருக்கிறது. இது எனது கடைசி உலகக் கோப்பை போட்டியாக இருக்கலாம். இந்தப் போட்டியை சிறப்பாக முடிக்க வேண்டும் என்ற எண்ணம் உள்ளது - என்றார். (ஐ)

# உலக கிண்ண பயிற்சி ஆட்டம் நியூசிலாந்து அணி வெற்றி!

ஹைதராபாத், ஒக். 02

ஐ. சி. சி. நடத்தும் 50 ஓவர் உலகக் கிண்ணப் போட்டிகள் இந்தியாவில் ஒக்ரோபர் 5ஆம் திகதி தொடங்கி நடைபெறவுள்ளது. இதன் தொடக்க ஆட்டத்தில் இங்கிலாந்து- நியூசிலாந்து அணிகள் மோதவுள்ளனன.

இதற்கிடையில், தற்போது பயிற்சி ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இதன்படி, நேற்று ஹைதராபாத்தில் பாகிஸ்தான் - நியூசிலாந்து அணிகள் மோதின. இதில், நாணய சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி துடுப்பெடுத் தாடியது.

இதன்படி துடுப்பெடுத்தாடிய அந்த அணி 50 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட் இழப்புக்கு 345 ஓட்டங்கள் குவித்தது. அணியில் அதிகபட்சமாக முகமது ரிஸ்வான் 103 ஓட்டங்கள் எடுத்தார்.

இதனை தொடர்ந்து 346 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் நியூசிலாந்து அணி களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரராக களமிறங்கிய ரச்சின் ரவீந்திரா 97 ஓட்டங்கள் எடுத்தார். காயத்தில் இருந்து மீண்டு அணிக்கு திரும்பிய கேன் வில்லியம்சன், அரைச்சதம் அடித்து அசத்தினார்.




மேலும், டரில் மிட்செல், மார்க் சாப்மேன் ஆகியோரின் அரைச்சதத்தின் உதவியால் நியூசிலாந்து அணி 43.4 ஓவர்களிலேயே இலக்கை கடந்தது. இதன் மூலம் நியூசிலாந்து அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

# உலகக் கிண்ண பயிற்சி இலங்கை அணி தோல்வி




ஹைதராபாத், ஒக். 02

இலங்கை - பங்களாதேஷ் அணிகள் மோதின. இதில், நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 49.1 ஓவர்களில் 263 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்து ஆட்டமிழந்தது.

பங்களாதேஷ் தரப்பில் மெஹதி ஹசன் 3 விக்கெட்களை கைப்பற்றினார்.

பின்னர், 264 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய வங்காளதேச அணி 42 ஓவர்களிலேயே 3 விக்கெட் மட்டும் இழந்து இலக்கை கடந்து 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. பங்களாதேஷ் அணி தரப்பில் தன்சித் ஹசன் அதிகபட்சமாக 84 ஓட்டங்கள் எடுத்தார்.

இதேநேரம், திருவனந்தபுரத்தில் நடைபெற இருந்த தென் ஆப்பிரிக்கா- ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையிலான பயிற்சி ஆட்டம் மழையின் காரணமாக ஒரு பந்து கூட வீசப்படாமல் இரத்தானது. (ஐ)

## ஆசிய விளையாட்டுப் போட்டி

# இலங்கையின் பதக்கம் பெறும் கனவு கலைந்தது




ஹங்ஸோவ, ஒக். 02

சீனாவின் ஹங்ஸோவில் நடைபெற்றுவரும் ஆசிய விளையாட்டு விழாவில் 400 மீற்றர் ஓட்டப் போட்டி மெய்வல்லுநர் நிகழ்ச்சிகளில் ஆண், பெண் இரு பாலாரிலும் இலங்கை பதக்கம் பெறத் தவறியது.

இலங்கைக்கு பதக்கம் பெற்றுக்கொடுக்கக் கூடியவர்கள் என எதிர்பார்க்கப்பட்ட காலிங்க குமாரகே, நடஷா ராமநாயக்க ஆகிய இருவரும் பாஹ்ரெய்ன், சீனா, ஜப்பான், சவூதி அரேபியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த மெய்வல்லுநர்களின் வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் தோல்வி அடைந்தனர்.

சனிக்கிழமை மாலை நடைபெற்ற பெண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப் போட்டியை 53.72 செக்கன்களில் நிறைவு செய்த நடஷா ராமநாயக்க 5ஆம் இடத்தைப் பெற்றார்.

ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் இலங்கை சார்பாக பங்குபற்றிய அருண தர்ஷன, காலிங்க குமாரகே ஆகிய இருவரும் முறையே 6ஆம், 7ஆம் இடங்களைப் பெற்றனர்.

400 மீற்றர் ஓட்டப் போட்டியை அருண தர்ஷன 46.09 செக்கன்களிலும், காலிங்க குமாரகே 46.22 செக்கன்களிலும் நிறைவுசெய்தனர்.

இலங்கை சார்பாக பங்குபற்றிய மூவரும் தத்தமது சிறந்த நேரப் பெறுதிகளிலும் பார்க்க மோசமான நேரப் பெறுதிகளையே பதிவுசெய்தனர். (ஐ)

# அ.தி.மு.க - பா.ஜ.க கூட்டணி பிளவு இயல்பானதா?

டி. கார்த்திக்



தமிழ்நாட்டில் கடந்த நான்கரை ஆண்டுகளாக நீடித்துவந்த அதிமுக-பாஜக இடையேயான கூட்டணி முடிவுக்கு வந்திருக்கிறது. அதிமுக தலைவர்கள் - பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை இடையே இரண்டரை ஆண்டுகளாக நீடித்த உரசல்கள், விமர்சனங்கள், கருத்து மோதல்கள் போன்றவற்றைக் காரணம் காட்டி, பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியிலிருந்து வெளியேறுவதாக அறிவித்திருக்கிறது அதிமுக. மக்களவைத் தேர்தலுக்கு இன்னும் 8 மாதங்களே உள்ள நிலையில், அதிமுகவின் இந்த விலகல் உறுதியானதா என்னும் விஸ்வரூபக் கேள்வி எழுந்திருப்பதில் வியப்பில்லை.

**விசித்திரமான காரணம்:**

அதிமுக-பாஜக இடையே இவ்வளவு ஆண்டுகள் கூட்டணி நீடித்ததே பெரும் சாதனைதான். ஏனெனில், ஜெயலலிதாவின் காலத்தில், 1998, 2004 ஆகிய ஆண்டுகளில் இக்கட்சிகள் இடையே அமைந்த கூட்டணியின் ஆயுள்சொற்ப காலமே நீடித்தது. 2019இல் அதிமுக-பாஜக கூட்டணி மலர்வதற்கு முன்பாக, 2016இல் அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதா சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டது முதலே அதிமுக மீது பாஜகவின் நிழல் படர்ந்தது.

அதற்கேற்ப பாஜக தேசியத் தலைமைக்குத் தம்மை நெருக்கமாகக் காண்பித்துக் கொள்ளும் போட்டி மனப்பான்மையில் அதிமுக தலைவர்கள் மூழ்கிக் கிடந்தனர். அதே நேரம் பாஜக மாநிலத் தலைவராக அண்ணாமலை நியமிக்கப்பட்டது முதலே அவரும் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியும் தண்ணீரும் எண்ணெயுமாக இருந்தனர். அதன் நீட்சியாக நீண்ட தூக்கத்திலிருந்து விழிப்பது போல இன்று பாஜக கூட்டணியை உதறித் தள்ளி வெளியேறியிருக்கிறது அதிமுக.

எனினும், பாஜக கூட்டணியிலிருந்து அதிமுக விலகுவதாகச் சொன்னதற்கான காரணம் உண்மையிலேயே சற்று விசித்திரமானது. பாஜகவின் தேசியத் தலைவர்களோடு அதிமுக தலைவர்களுக்கு எந்த மோதலும் இல்லை. தமிழ்நாடு பாஜக மாநிலத் தலைவரான அண்ணாமலைதான் அதிமுகவுக்கு உள்ள ஒரே பிரச்னை என்று பிரிவை அறிவிக்கும் அதிமுகவின் அறிக்கையிலேயே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

அறிஞர் அண்ணா, ஜெயலலிதா உள்ளிட்ட முன்னோடித் தலைவர்களை அண்ணாமலை விமர்சித்தார், எடப்பாடி பழனிசாமியைச் சிறுமைப்படுத்தினார் என்பன போன்றவையே காரணங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. என்றாலும், இக்கூட்டணி முறிவுக்கு வேறு சில வலுவான காரணங்களும் இருக்கின்றன.

**பரஸ்பரப் புரிதலின்மை:**

கூட்டணி என்பதே பரஸ்பரப் புரிதலோடு இயங்குவதுதான். ஒன்றை விட்டு ஒன்றைப் பெறுவதுதான். ஆனால், அதிமுக தலைவர்களைக் கோபம் கொள்ள வைத்திருப்பது தமிழ்நாட்டில் ஆட்சி அமைப்பது தொடர்பாக அண்ணாமலை முன்வைக்கும் கருத்துகள். தமிழ்நாட்டில் பாஜக ஆட்சி அமைக்கும் என்று பேசுவதற்கோ, அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கோ அண்ணாமலைக்கு உரிமை உண்டு. ஆனால், அது எல்லாமே தனித்துச் செயல்படும்போது மட்டுமே சாத்தியம்.

முன்பு தேசியக் கட்சியான காங்கிரஸுடன் அதிமுக பல முறை கூட்டணி கண்டிருக்கிறது. மத்தியில் காங்கிரஸ் ஆட்சிக்கு அதிமுக உதவுவது, மாநிலத்தில் அதிமுக ஆட்சிக்குக் காங்கிரஸ் உதவுவது என்ற புரிதலோடுதான் கூட்டணியின் செயல்பாடுகள் அமைந்தன. கடந்த 20 ஆண்டுகளாக நீடிக்கும் திமுக - காங்கிரஸ் கூட்டணியும் அதே வகையான புரிதலோடுதான் தொடர்கிறது.

தமிழ்நாட்டில் ‘காமராஜர் ஆட்சி அமைப்போம்’ என்று பேசாத காங்கிரஸ் தலைவர்களே கிடையாது. ஆனால், கூட்டணித் தலைவர்கள் மனம் கோணும் வகையில் அதைப் பூதாகரமாக மாநில காங்கிரஸ் தலைவர்கள் பேசியதில்லை. கட்சி தொடங்கியது முதல் தன்னுடைய ஆட்சி என்று பேசிவந்த தேமுதிக தலைவர் விஜயகாந்த், 2011இல் அதிமுகவோடு கூட்டணி வைத்தபோது ஜெயலலிதாவைத்தான் முதலமைச்சர் வேட்பாளராக முன்னிறுத்தினார்.

தற்போது அதிமுக-பாஜக கூட்டணியில் இது தலைகீழாக இருப்பதுதான் முரண். மோடியை மூன்றாவது முறையாகப் பிரதமராக்க உழைப்போம் என்று அதிமுக தலைவர்கள் பேசும்போது, “எடப்பாடி பழனிசாமியைத் தமிழ்நாட்டின் முதல்வராக்குவோம் என்று நான் கூற முடியாது. நிச்சயமாக பாஜக 2026இல் தமிழ்நாட்டில் ஆட்சி அமைக்கும்” என்று அண்ணாமலை அறிவித்தால், அங்கு கூட்டணிக் கட்சிகளுக்கு இருக்க வேண்டிய பரஸ்பரப் புரிதல் அடிபட்டுப் போகாதா? எனில், மாநிலத்தில் ஆட்சி அமைக்கும் போட்டியில் அதிமுக, பாஜக தனித்தனியாகக் களமிறங்குவதே உசிதம். அதைத்தான் அதிமுக செய்திருப்பதாகக் கருத இடமுண்டு.

**தொக்கி நிற்கும் கேள்விகள்:**

அதிமுக-பாஜக கூட்டணி முறிந்துவிட்டதாக அதிமுக அறிவித்துவிட்டாலும், அரசியல் அரங்கிலும் பொதுவெளியிலும் அது சந்தேகக் கண்ணோடுதான் அணுகப்படுகிறது. ஏனெனில், கூட்டணியின் பிரச்சினையாக அண்ணாமலைதான் உருவகப்படுத்தப்பட்டிருக்கிறார். ஒருவேளை, அண்ணாமலையை பாஜக தேசியத் தலைமை மாற்றிவிட்டால் அல்லது அதிமுகவுக்கு எதிராக எதுவும் பேசக் கூடாது என்று கட்டுப்பாடுகளை அவருக்கு விதித்துவிட்டால், அதிமுகவின் நிலைப்பாடு என்ன? அப்படி நடந்தால் பாஜகவோடு அதிமுக மீண்டும் கூட்டணியை ஏற்படுத்துமா? பிரதமர் மோடியோ உள்துறை அமைச்சர் அமித் ஷாவோ எடப்பாடி பழனிசாமியைச் சமாதானம் செய்தால், அப்போதும் அதிமுக தன்னுடைய முடிவில் உறுதியாக இருக்குமா? இது போன்ற கேள்விகள் தற்போது அதிமுகவைத் துரத்துகின்றன. அதே நேரம், எடப்பாடி பழனிசாமி டெல்லியில் அமித் ஷா வைச் சந்தித்துவிட்டு வந்த பிறகுதான் இந்தக் கூட்டணி முறிவு அறிவிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் மறந்துவிட முடியாது.

இன்றைக்கும் அதிமுக-பாஜக இடையே கொள்கை மோதல்களோ, மத்திய அரசுத் திட்டங்கள் தொடர்பாகக் கருத்து வேறுபாடுகளோ இல்லை. மத்திய அரசின் முடிவுகள் தமிழ்நாட்டுக்குத் தீங்கு விளைவிக்கும் என்கிற விமர்சனங்கள் எதுவும் அதிமுகவிடம் வெளிப்படவில்லை. இந்தப் பின்னணியில்தான், பாஜகவும் அதிமுகவும் பேசி வைத்துக்கொண்டு இந்த அரசியல் விளையாட்டை விளையாடுவதாக திமுக குற்றம்சாட்டியுள்ளது.

**தப்பிக்கும் அதிமுக:**

அதிமுக தலைவர்கள்-அண்ணாமலை இடையே பல்வேறு சந்தர்ப்பங்களில் வார்த்தை மோதல்கள் ஏற்பட்டபோதெல்லாம், இக்கூட்டணி நீடிப்பதற்குக் காரணம், பாஜகவின் டெல்லி நிழலில் அதிமுக இருப்பதே என்கிற விமர்சனம் முன்வைக்கப்பட்டது. தற்போது பாஜக கூட்டணியிலிருந்து அதிமுக விலகியிருப்பதன் மூலம், இந்த விமர்சனங்களிலிருந்து அதிமுக விடுபட உதவும். பாஜகவோடு கூட்டணியில் இருப்பதால் மத்திய அரசின் மீதான எதிர்க்கட்சிகளின் விமர்சனங்களை அதிமுகவும் சேர்த்தே தமிழ்நாட்டில் எதிர்கொண்டுவந்தது. அந்த விமர்சனங்களிலிருந்தும் அதிமுக தப்பிக்கக்கூடும்.

அதிமுகவின் தற்போதைய முடிவு, 2024 மக்களவைத் தேர்தல் தமிழ்நாட்டில் இண்டியா கூட்டணி-தேசிய ஜனநாயகக் கூட்டணி என்ற போட்டியைப் பாரம்பரியப் போட்டியாக திமுக-அதிமுக போட்டியாக மடைமாற்றும். அதிமுக முன்னாள் அமைச்சர்கள் மீதான ஊழல் புகார்களின் காரணமாகவே பாஜக கூட்டணியில் அதிமுக நீடிப்பதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளும் அடிப்பட்டுப்போகும். பாஜக கூட்டணியால் சிறுபான்மையினரின் வாக்குகளை இழந்துவிட்டதாகக் கருதும் அதிமுக, அந்த வாக்குகளைப் பெற முனையும்.

**காத்திருக்கும் சவால்:**

பாஜக உறவை உதறித் தள்ளிவிட்டதை - அரசியல் களத்தைத் தாண்டி - பொதுவெளியில் நம்பவைக்க வேண்டிய கட்டாயமும் அதிமுகவுக்கு ஏற்பட்டிருக்கிறது. அண்ணாமலைக்கு எதிராகப் பேசும் அதிமுக தலைவர்கள், மக்களவைத் தேர்தலுக்குப் பிறகு கூட்டணி சேர மாட்டார்களா, பிரதமர் மோடி, உள் துறை அமைச்சர் அமித் ஷா ஆகியோருக்கு எதிராகப் பேசுவார்களா என்கிற சந்தேகம் இப்போதே அரசியல் ஆர்வலர்கள் மத்தியில் உருவாகியிருக்கிறது. ஆனால், எந்த ஒரு காரணத்தை முன்வைத்தும் பாஜகவுடன் மீண்டும் கூட்டணி அமைக்கவே மாட்டோம் என அதிமுக துணைப் பொதுச் செயலாளர் கே.பி.முனுசாமி திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

கூட்டணி முறிந்தது முறிந்ததுதான் என்பதில் உறுதியாக இருந்து, தனது தலைமையில் எடப்பாடி பழனிசாமி புதியதொரு கூட்டணியை அமைத்து, வரும் நாடாளுமன்றத் தேர்தலைச் சந்திப்பாரேயானால், ‘அடிமை அதிமுக’ என்று இனிமேல் எக்காலத்திலும் திமுக-வால் கேலி பேச முடியாது.

●

பேராசிரியர்
ஜயாத்தி கோஷ்
பேராசிரியர்
காஞ்சன என். ருவன்புர

# இலங்கையின் அபாயகரமான உள்நாட்டுக் கடன் மீளமைப்பு

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ மற்றும் அவருடைய சகோதரர் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரை வெளியேற வைத்த அறகலய என அழைக் கப்பட்ட பாரிய மக்கள் எதிர்ப்பியக்கம் முன்னெடுக்கப் பட்டு ஒரு வருடத்திற்கு சற்று மேற்பட்ட காலப் பிரிவுக் குள் இலங்கை மக்கள் மீண்டும் ஒரு முறை வீதியில் இறங் கியிருக்கிறார்கள்.

பொது மக்களின் அதிருப்தி மீண்டும் தலைதூக்குவதற்கான தூண்டுதல் காரணி சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அரசாங்கம் என்பவற்றுக்கிடையில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கான ஒப்பந்தமாகும். நாட்டின் நீடித்து வரும் சென்மதி நிலுவை நெருக்கடியைக் கவனத்திலெடுக்கும் நோக்கத்தில் செய்து கொள்ளப்பட்ட இந்த ஒப்பந்தம் நான்கு வருடத்துக்கு மேற்பட்ட காலப் பிரிவின் போது இலங்கைக்கு 3 பில்லியனுக்கும் குறைந்த அமெரிக்க டொலர்களையே வழங்குகின்றது - நாடு அதன் கடன்களை திருப்பிச் செலுத்தும் கடப்பாட்டினை நிறைவேற்றி வைப்பதற்குத் தேவைப்படும் தொகையில் இது ஒரு சிறு அளவாக இருந்து வருவதுடன், 2022ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 18 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்து வந்த அதன் அந்நியச் செலாவணி வருவாயில் ஆறில் ஒரு பங்கு மட்டுமேயாகும்.

இந்த அவசர கடனுதவிக்கு பகரமாக சர்வதேச நாணய நிதியம் தொடரான பல நிபந்தனைகளை விதித்துள்ளது. அந்நிபந்தனைகள் இலங்கையின் ஊதியம் மற்றும் வாழ்க்கைச் செலவு நெருக்கடிகள் என்பவற்றை கணிசமான அளவில் தீவிரப்படுத்தியுள்ளன. குறிப்பாக, சந்தை செலாவணி விகிதங்களுக்கு நகர்ந்து செல்ல வேண்டும் எனக் கட்டாயப்படுத்திய பணிப்புரை உடனடியாக தீவிரமான நாணயப் பெறுமதி இறக்கமொன்றுக்கு வழிகோலியது. அதன் விளைவாக, இறக்குமதி செய்யப்படும் எரிபொருள் மற்றும் உணவுப் பொருட்கள் என்பவற்றின் விலைகள் வானளாவ அதிகரித்தன. மேலும், ஜூன் 2022 க்கும் பெப்ரவரி 2023 க்கும் இடைப்பட்ட காலப் பிரிவின் போது மின்சார கட்டணங்களில் 165 வீதம் அதிகரிப்பு ஏற்படுவதற்கு அது பங்களிப்புச் செய்தது.

அரசிறை கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்த நிலையில் பொருளாதாரம் தொடர்ந்தும் அதன் வீழ்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருந்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தி 2022 இல் 7.8 வீதத்தால் வீழ்ச்சியடைந்தது டன், 2023 இன் முதல் காலாண்டின் போது 11.5 வீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. இது வேலைவாய்ப்பு, வாழ்வாதாரங்கள், சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சியின் சாத்தியப்பாடு என்பவற்றின் மீது மிக மோசமானதொரு தாக்கத்தை எடுத்து வந்திருந்தது. அதனையடுத்து மெய் வேதனங்கள் 2022 இல் 30 - 50 வீதத்தால் வீழ்ச்சியடைந்ததுடன், அவை தொடர்ந்தும் தேக்க நிலையில் இருந்து வந்துள்ளன.

ஊழலுக்கெதிராகப் போராடுதல் மற்றும் சட்ட விரோதமான நிதிப் பாய்ச்சல்களைத் தடுத்து நிறுத்துதல் என்பவற்றின் முக்கியத்துவம் குறித்து வார்த்தை ஜாலங்கள் முன்வைக்கப்பட்ட போதிலும், சர்வதேச நாணய நிதியத்தின் திட்டம் இந்தப் பிரச்சினைகளை வினைத்திறன் மிக்க விதத்தில் கையாள்வதற்கு போதிய வலுவைக் கொண்டதாக இருந்து வரவில்லை. கம்பனித்துறை வருமான வரிகளில் அது ஒரு மிதமான அளவிலான அதிகரிப்பை உள்ளடக்கினாலும் கூட, செல்வ வரியினை விதிக்கும் சாத்தியப்பாட்டினை அது புறக்கணிக்கின்றது. மேலும், பெறுமதி சேர் வரியை 15 வீதத்தால் அநேகமாக இரட்டிப்பாக அதிகரித்தல் போன்ற பெருமளவுக்கு பிற்போக்கு இயல்பிலான வரி முறைகள் மீது அது கவனம் செலுத்தியிருப்பது, மறைமுக வரிகளுக்கூடாக உருவாக்கப்படவிருக்கும் மேலதிக வருமானத்தின் பெரும் பகுதி சாதாரண மக்கள் மீது மிதமிஞ்சிய அளவிலான ஒரு தாக்கத்தை எடுத்து வரும் என்பதைக் குறிக்கின்றது.

வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுக் கடன்களை மீளமைப்புச் செய்ய வேண்டும் என்ற சர்வதேச நாணய நிதியத்தின் கோரிக்கைக்கு இணங்கியொழுகுவது குறித்து அரசாங்கம் எடுத்திருக்கும் தீர்மானத்துக்கான ஓர் எதிர்வினையாகவே தற்போதைய எதிர்ப்பு ஆர்ப்பாட்ட அலை தோன்றியிருக்கிறது. வெளிநாட்டுக் கடனை தாங்கிக் கொள்ளக் கூடிய ஒரு மட்டத்துக்கு குறைக்கும் விடயத்தில் கவனம் செலுத்துவதற்குப் பதிலாக, இந்த ஒப்பந்தம் மொத்தக் கடனை குறைக்கும் விடயத்தை நோக்கமாகக் கொண்டுள்ளது. அதன் மூலம் வெளிநாட்டுக் கடன் வழங்குநர்கள் தொடர்பாக விதிக்கப்பட்டிருக்கும் பிணைகளின் பெறுமதி இழப்பு விகிதத்தை 30வீதமாக மட்டுமே வைத்துள்ளது.

இது நெருக்கடியை மேலும் தீவிரப்படுத்தியிருப்பதுடன், அதனை நியாயப்படுத்துவது சிரமமானதாக இருந்து வருகின்றது. உலகளாவிய நாணய இருப்பை வெளியிடாத நாடுகளில் உள்நாட்டுக் கடன் மற்றும் வெளிநாட்டுக் கடன் என்பவற்றுக்கிடையில் ஒரு தெளிவான வேறுபாடு இருந்து வருகின்றது. அரசாங்கங்கள் தமது சொந்த நாணயங்களைப் பயன்படுத்துவதன் மூலம் உள்நாட்டுக் கடன்களை திருப்பிச் செலுத்த முடியும் அவை அவ்வாறு செய்தும் வருகின்றன. தமது சொந்த நாணயங்களின் வழங்கல் அந்தந்த அரசாங்கங்களின் மத்திய வங்கிகளினால் கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றது. இதற்கு மாறான விதத்தில், வெளிநாட்டு நாணயத்தில் கடன்களை திருப்பிச் செலுத்த வேண்டுமானால் அந்நியச் செலாவணி வருவாயை ஈட்டுவதோ அல்லது புதிய கடனெடுப்புக்களை மேற்கொள்வதோ அவசியமாகும்.

**சர்வதேச நாணய நிதியம் மற்றும் இலங்கை என்பவற்றுக்கிடையில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கான ஒப்பந்தம் எதிர்கொண்டு வரும் கட்டமைப்பு ரீதியான பிரச்னைகளை கவனத்திலெடுக்கத் தவறுகின்றது. அதற்குப் பதிலாக, அது உழைக்கும் மக்கள் மீது மிக மோசமான விதத்திலான பாதிப்புக்களை எடுத்துவரக் கூடிய பெருமளவுக்கு பிற்போக்கு இயல்பிலான வழிமுறைகள் மீது கவனம் செலுத்துவதுடன், அது நாட்டின் தொடர்ந்து நீடிக்கும் கடன் சுமையை மேலும் தீவிரப்படுத்த முடியும்.**

இலங்கை எதிர்கொண்டு வரும் நெருக்கடி, அந்நியச் செலாவணி இருப்புகள் போதியளவில் இல்லாதிருப்பதன் காரணமாக வெளிநாட்டுக் கடன்களைச் செலுத்த முடியாதிருக்கும் நிலையின் விளைவாகவே தோன்றியிருக்கின்றது. அரசாங்கம் 2016 தொடக்கம் இரு தரப்பு மற்றும் முத்தரப்பு கடன் வழங்குநர்களையும் உள்ளடக்கிய விதத்தில் வெளிநாட்டுக் கடன் வழங்குநர்களுக்கு கடன்களை திருப்பிச் செலுத்துவதற்கென பிரதானமாக தனியார் கடன் வழங்குநர்களிடமிருந்து புதிய சர்வதேச கடன்களைப் பெற்றுக் கொள்ள விரும்பியது. மாற்றுத் தீர்வுகளைக் கண்டறிவதற்குப் பதிலாக, அதன் வெளிநாட்டுக் கடன்களை திருப்பிச் செலுத்துவதனை நிறுத்துவதற்கு 2022ஆம் ஆண்டின் தொடக்கத்தில் அரசாங்கம் முடிவு செய்தது.

ஆனால், ஏற்கனவே வீழ்ச்சியடைந்து கொண்டிருக்கும் ஒரு பொருளாதாரத்தில் உள்நாட்டுக் கடன்களை மீளமைப்புச் செய்வது என்பது, வேதனைமிக்கதாகவும், அதேபோல அநாவசியமானதாகவும் இருந்து வருகிறது. இலங்கையின் உள்நாட்டுக் கடன்களை மத்திய வங்கி, வர்த்தக வங்கிகள் மற்றும் ஓய்வூதிய நிதியங்கள் என்பவற்றையும் உள்ளடக்கிய விதத்தில் பல்வேறு நிறுவனங்கள் வைத்துள்ளன. நாட்டின் வங்கித் தொழில் முறைமை ஏற்கனவே மிகவும் மோசமான விதத்தில் பலவீனமடைந்திருக்கும் பின்னணியில், எதிர்பார்க்கப்படும் சீராக்கத்தின் மிக மோசமான பாதிப்புக்களை ஓய்வூதிய நிதியங்கள் நிச்சயமாக எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

இது ஏற்கனவே பாரிய விலை அதிகரிப்புக்களினால் பாதிக்கப்பட்டிருக்கும் தொழிலாளர்களின் ஓய்வுகால சேமிப்புக்கள் மீது கணிசமான ஒரு தாக்கத்தை எடுத்து வர முடியும். இலங்கையின் மிகப் பெரிய ஓய்வூதிய நிதியங்கள் வைத்திருக்கும் இறைமைக் கடன் முறிகளின் வட்டி விகிதங்களை 20 வீதத்தில் இருந்து 12 வீதமாக குறைப்பதன் மூலமும், அதன் பின்னர் 2025ஆம் ஆண்டு தொடக்கம் அவை முதிர்ச்சியடையும் வரையில் வட்டி விகிதத்தை 9 வீதமாகக் குறைப்பதன் மூலமும் அரசாங்கம் அதன் வட்டி சுமையை வருடாந்த மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 0.5 வீதமாக குறைத்துக் கொள்வதனை நோக்கமாகக் கொண்டுள்ளது.

அகிலன் கதிர்காமர் அண்மையில் மேற்கொண்ட மதிப்பீடுகள், இதன் விளைவாக இன்றிலிருந்து ஒரு தசாப்த காலத்துக்குள் ஓய்வூதிய நிதியங்களின் மதிப்பு 30 வீதத்தால் வீழ்ச்சியடையும் என உத்தேசிக்கின்றன. மேலும், பெரும்பாலான சந்தரப்பங்களில் உழைக்கும் மக்கள் வைத்திருக்கும் ஒரேயொரு நிதிச் சொத்தாக இருந்து வரும் இந்த ஓய்வூதிய நிதியங்களின் ஆதாயங்கள் மீது 30 வீதம் வரி அறவிடப்படவுள்ளது. இது கம்பனித்துறையில் பல கம்பனிகள் மீது பிரயோகிக்கப்படும் வரி விகிதத்திலும் பார்க்க உயர்வானதாகும்.

தமது வாழ்நாள் சேமிப்புக்களை இந்த ஓய்வூதிய நிதியங்களில் முதலீடு செய்திருக்கும் பெருந் தொகையான தொழிலாளர்கள் வரி அறவிடப்படக் கூடிய குறைந்தபட்ச வருமானத் தொகையிலும் பார்க்க குறைவான வேதன வருமானங்களையே உழைத்து வருகின்றார்கள். ஆடைத் தொழில்துறையில் வேலை செய்து வரும் பெண்கள் மற்றும் சிறுபான்மை தமிழ் குழுக்களைச் சேர்ந்த பெருந்தோட்டத் தொழிலாளர்கள் போன்ற பால்நிலை மற்றும் இனத்துவ அடிப்படையில் பாரபட்சம் போன்ற ஒன்றுடனொன்று சம்பந்தப்பட்ட எண்ணற்ற பாதிப்புக்களை எதிர்கொண்டு வரும் தொழிலாளர்களையும் இது உள்ளடக்குகின்றது.

இந்தக் குழுக்கள் ஏற்கனவே தமது வாழ்க்கைத் தரங்களில் பாரியளவிலான ஒரு வீழ்ச்சியை அனுபவித்து வந்துள்ளன. இலங்கையின் 22.2 மில்லியன் மக்களில் சுமார் 56 வீதத்தினர் இப்பொழுது பன்முகப் பரிமாணங்களைக் கொண்ட பலவீன நிலைமைகளை எதிர்கொண்டு வருகின்றனர். இவர்களில் பெண்கள் மற்றும் இளம் பெண்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட பிரிவினராக இருக்கின்றனர். ஐந்து வயதுக்குக் குறைந்த பிள்ளைகளில் சுமார் 43 வீதத்தினர் போசாக்கின்மையினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதனை உத்தியோகபூர்வ மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. அதேபோல, கணிசமான அளவிலான கர்ப்பிணித் தாய்மார் மற்றும் தாய்ப் பாலூட்டும் பெண்கள் ஆகியோரும் போசாக்கின்மையை எதிர்கொண்டுள்ளனர்.

இலங்கையின் வேதனத் தொழிலாளர்களுக்கு உரித்தான சிறு அளவிலான ஓய்வூதிய நிதியங்களை இலக்காகக் கொள்வதன் மூலம் அரசாங்கத்தின் உள்நாட்டுக் கடன் மீளமைப்புத் திட்டம் தற்போதைய வர்க்க, பால்நிலை மற்றும் இனத்துவ ஏற்றத்தாழ்வுகளை மேலும் தீவிரப்படுத்த முடியும். கடின உழைப்புக்கூடாக ஈட்டிக் கொண்டிருக்கும் தமது சேமிப்புக்கள் இல்லாமல் செய்யப்படும் பொழுது, வறுமை மட்டத்திலிருக்கும் தொழிலாளர்கள் மேலும் கீழ் நிலைக்குள் தள்ளப்படுவார்கள்.

அதே வேளையில், இந்த சீராக்க செயன்முறை, சிக்கனம் மற்றும் குறைந்து வரும் சமூக சேவைகள் என்பவற்றின் பின்னணியில் தொடர்ந்தும் வேதனமற்ற பராமரிப்புப் பணிகளை வழங்கி வரும் பெண்களின் மீது பெருமளவுக்கு தங்கியிருந்து வருகின்றது. இலங்கையின் உழைக்கும் வர்க்க பெண்களின் இந்தப் பரிதாப நிலை, நாட்டின் கடன் நெருக்கடி தெளிவான விதத்தில் எடுத்து வந்திருக்கும் பால்நிலை அடிப்படையிலான பாதிப்புக்களையும், அதனை எதிர்கொள்வதற்கான அரசாங்கத்தின் அணுகுமுறையையும் எடுத்துக் காட்டுகின்றது.

இலங்கையின் தொடர்ந்து நீடித்து வரும் பொருளாதார நெருக்கடிக்கு உண்மையான ஒரு தீர்வு கிட்ட வேண்டுமானால் உத்தி தொடர்பான தீவிரமான ஒரு மாற்றம் அவசியப்படுகின்றது. வலுவான ஒரு பொருளாதார மீட்சியை எடுத்து வரும் முயற்சியின் போது அரசாங்கமும், சர்வதேச நாணய நிதியமும் உழைக்கும் மக்கள் மீது இந்தச் சீராக்க நடவடிக்கையின் சுமைகளை ஏற்றுவதற்குப் பதிலாக, அவர்களுடைய வாழ்க்கை நிலைமைகளை விருத்தி செய்யும் விடயத்தில் கவனம் செலுத்துவது அவசியமாகும்.

(ஜயாத்தி கோஷ்: ஜயாத்தி கோஷ், மசாசுசெட்ஸ் அமஹர்ஸ்ட் பல்கலைக்கழகத்தின் பொருளியல் பேராசிரியராக இருந்து வருவதுடன், ரோம்ஸ் கிளப்பின் நிலைமாற்றப் பொருளாதார ஆணைக்குழுவின் ஒரு உறுப்பினராகவும் உள்ளார்.

காஞ்சன என். ருவன்புர: கோத்தன்பெர்க் பல்கலைக்கழகத்தில் அபிவிருத்தி புவியியல் பேராசிரியராக பணியாற்றி வரும் காஞ்சன என். ருவன்புர, இலங்கை அரசியல் பொருளாதாரத்துக்கான மெய்நிகர் மற்றும் தன்னார்வ முன்முயற்சி நிறுவனத்தின் ஒருங்கிணைப்புக் கூட்டமைப்பின் ஓர் உறுப்பினராகவும் இருந்து வருகிறார்.)

●

# யாத்திரிகர்கள் பயணித்த பஸ்ஸை யானை தாக்கியது

கொழும்பு, ஒக். 02

அநுராதபுரம் - தந்திரிமலை பிரதான வீதியின் மணிங்கமுவ - ஓயாமடுவ பிரதேசத்தில் யாத்திரிகர்களை ஏற்றிச் சென்ற பஸ் ஒன்றை காட்டு யானை தாக்கியுள்ளது.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற தாக்குதலில் பஸ்ஸூக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மாத்தறையிலிருந்து அநுராதபுரம் நோக்கி யாத்திரிகர்களை ஏற்றிச் சென்ற பஸ் மீது இந்த காட்டு யானை தாக்கியுள்ளது.

இந்த யானை அப்பகுதியில் பல தாக்குதல்களை நடத்தியுள்ளது. வீடுகளுக்கும் பலத்த சேதங்களை ஏற்படுத்தியுள்ளதாகவும் இதற்கு முன்னரும் வீதியில் செல்லும் வாகனங்களை தாக்கியுள்ளதாகவும் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பல முறை தெரிவித்தும் தீர்வு கிடைக்கவில்லை என்றும் கிராம மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். (ஐ)

# விதி மீறும் சிற்றுண்டிசாலைகள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்!

## பொது சுகாதார பரிசோதகர் சங்கம்

கொழும்பு, ஒக். 02

சுகாதார அமைச்சின் உத்தரவை அடுத்து, பொது சுகாதார பரிசோதகர்கள் ஒன்றியம், கல்வி அமைச்சுடன் இணைந்து, தொற்றா நோய்கள் பாடசாலை மாணவர்களிடையே ஏற்படுவதை தடுக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

பொதுச் சுகாதார பரிசோதகர் தொழிற்சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண ‘பாடசாலை உணவகக் கொள்கையை’ நடைமுறைப்படுத்துவதற்கு செயல்படுவதாக தெரிவித்தார்.

கொள்கையின்படி, பாடசாலை சிற்றுண்டி சாலைகளில் அதிகளவு கொழுப்பு, உப்பு மற்றும் பாதுகாப்பு பொருட்கள் மற்றும் காபன் ஏற்றப்பட்ட பானங்கள் அடங்கிய உணவு பொருட்களை விற்பனை செய்வது தடை செய்யப்படும்.

இதன்பொருட்டு தனியார் மற்றும் அரச பாடசாலைகளில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், சோதனைகள் மற்றும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கூறிய அவர், கொள்கையை மீறும் சிற்றுண்டி சாலை உரிமையாளர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் - என்றும் எச்சரித்தார். (ஐ)

# நீதிவானுக்கு அச்சுறுத்தல் எதிராக சகலரும் திரள்வோம்!

## சுரேஷ் பிறேமசந்திரன் அழைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 02

நீதிபதிக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளமைக்கு எதிராக அனைவரும் அணி திரள்வோம் என ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் பேச்சாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் க.பிரேமச்சந்திரன் அறைகூவல் விடுத்துள்ளார்.

அண்மையில் உயிர் அச்சுறுத்தல் காரணமாக நீதிபதியே நாட்டை விட்டே வெளியேறும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள சம்பவத்திற்கு குறிப்பாக தமிழர்களின் மரபுரிமையைக் காப்பதற்காக வழங்கப்பட்ட நீதிமன்றக் கட்டளையை மாற்றியமைக்குமாறு விடுக்கப்பட்ட அழுத்தங்களையும் உயிரச்சுறுத்தலையும் தமிழ் மக்களாகிய நாம் அனைவரும் ஒன்று திரண்டு எதிர்க்க வேண்டும் என்று ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் பேச்சாளர் சுரேஷ் க. பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையின் முழு விபரம் வருமாறு:

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி திரு.ரி.சரவணராஜா அவர்கள் அச்சுறுத்தப்பட்டு, அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு நாட்டைவிட்டு வெளியேறும் அளவுக்கு நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கின்றார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் குருந்தூர்மலை பிரதேசத்தை சிங்களமயப்படுத்துவ தற்கு புத்தபிக்குகள் எடுத்த முயற்சியை சட்டத்தின் அடிப்படையில் நின்று அதற்கான உத்தரவுகளைப் பிறப்பித்தது அவருக்கு மேல் புத்தபிக்குகள் சினம்கொள்வதற்குக் காரணமாக அமைந்தது.

குறைந்தபட்சம் நீதிமன்றங்களினூடாக தமிழ் மக்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய நீதி, நியாயத்திற்குக்கூட இவ்வாறான நடவடிக்கைகள் ஊடாக வேட்டு வைக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் நீதித்துறையைக் களங்கப்படுத்துவது மாத்திரமல்லாமல் தமிழ் மக்களுக்கு தமது சொந்த இடத்திலும் நீதிகிடைக்கமாட்டாது என்ற நிலையும் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தினது ஜனநாயகவிரோத, தமிழ் மக்கள் விரோத இத்தகைய நடவடிக்கைகளை ஒட்டுமொத்தமான தமிழ் மக்களும் வன்மையாகக் கண்டிப்பதை வெளிப்படுத்தும் முகமாக வருகின்ற 4ஆம் திகதி புதன் கிழமை மருதனார்மடம் சந்தியிலிருந்து யாழ்ப்பாணம் நகரம்வரை மனித சங்கிலி போராட்டம் ஒன்றினை நடத்துவதற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி ஈழ மக்கள்



புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம் , தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் , சிறீகாந்தா தலைமையிலான தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி, தமிழ் மக்கள் கூட்டணி ஆகியவை இணைந்து தீர்மானித்துள்ளன.

ஆயிரக்கணக்கில் நாங்கள் ஒன்று திரண்டு இந்த மனித சங்கிலிப் போராட்டத்தில் கலந்துகொள்வதினூடாக எமது எதிர்ப்பையும் கண்டனத்தையும் வெளிப்படுத்துவோம். காலை 9.00 மணிமுதல் 10.00 மணிவரை நடைபெறவுள்ள இந்த மாபெரும் போராட்டத்தில் அனைத்து மக்களையும் கலந்துகொள்ளுமாறு ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் சார்பாக அன்புடன் அறைகூவி அழைக்கிறோம் - என்றுள்ளது. (ஐ)

